Registered as a News Paper
பக்கம் – 16

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly


விலை: 12.00

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | 24 - 31 ஜனவரி 2003 | ஓசை 340





## கேணல் கிட்டு,லெப் குட்டிசிறி உட்பட 10 வேங்கைகளின் 10ம் ஆண்டு நினைவு நிகழ்வில்...




## ஜப்பானின் பிரவேசம்

## இந்த உலகம் பாதுகாக்கப்பட்டால்...



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 24.01.2003

# அரசை ஆபத்துக்குள்ளாக்கும் இராணுவத்தினரின் செயற்பாடுகள்

சிறிலங்காவின் இராணுவம் என்பது ஆளும் ஐ.தே. முன்னணி அரசின் கட்டுப்பாட்டுக்குள் - அதாவது பாதுகாப்பு அமைச்சின் கீழ் அதன் உத்தரவுகளுக் கிணங்கி - அதனை முழுமையாக மதித்து இயங்கும் ஒரு அமைப்பாக முழுவதும் இல்லை என்பது சந்தேகத்திற்கிடமில்லாத ஒரு விடயமாகும்.

இராணுவம் மட்டுமல்ல ஏனைய பாதுகாப்பு கட்டமைப்புகளிலும் நிலைமை இப்படித்தான் உள்ளது.

சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரவலுவின் ஆளுமையின் கீழான உயர்பதவிகளை நிர்ணயிக்கும் - அதற்கு அங்கீகாரமளிக்கும் அல்லது உறுதிப்படுத்தும் அதிகாரங்கள் சிறிலங்காவின் முப்படை மற்றும் பொலிஸ் படையின் நிர்வாக உயர் பீடங்களை தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அபரிதமான - சர்வாதிகாரத்தன்மை கொண்ட ஆற்றலைக் கொண்டதாக இருப்பதுடன் அவரே முப்படைகளின் தளபதியாகவும் இருப்பதே இதற்குப் பிரதானமான காரணியாகும்.

கடந்த ஆட்சிக் காலத்தில், தமிழ் மக்களுக்கெதிரான போரை சந்திரிகா + ரத்வத்தை மாமா. மருமகள் அல்லது பாதுகாப்பு அமைச்சர் + பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கூட்டணி மூர்க்கத்தனமாக முன்னெடுத்த வேளையில் இராணுவம் மட்டுமல்ல சிறிலங்காவின் பாதுகாப்புப்படைகள் கட்டமைப்புகள் அனைத்தினதும் உயர்பீடநிர்வாகம் - செயற்பாடுகள் அனைத்தும் அதன் தேசியத் தன்மை பறிக்கப்பட்டு, முழுமையாக அரசியல் மயமாக்கப்பட்டதையடுத்து சிறிலங்கா பாதுகாப்பு கட்டமைப்புகளின் அதிகார பீடத்தவர்கள் பெரும்பாலோர் சனாதிபதியினதும் ரத்வத்தையினதும் அபிலாசைகளுக்கு கட்டுப்பட்டு செயற்படும் - அதன் மூலம் வசதிவாய்ப்புக்கள், பதவியுயர்வுகள், மேலும் பல விபரிக்க இயலாத 'லாபங்கள்' ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டு 'சேவகம்' செய்யும் சுயநலமிகளாயினர்.

சந்திரிகாவின் ஆட்சிக்கால ஏழாண்டு காலப் போரின் பெறுபேறுகளால் பாதுகாப்புப் படைகளின் தேசியத்தன்மைக்கு அரசியல் விசமூட்டப்பட்டதனால், ஆட்சி மாறியும் கூட அந்த விசத்தினால் ஏற்பட்ட தாக்கங்களின் எதிரொலி தான் இன்று சமாதான நெருக்கடிகளுக்கு பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது என்பதும் வெளிப்படையான விடயமே.

சமாதான நடவடிக்கைகளுக்கு பெரும் 'தடை'யாக நேரடியாகவும், மறைமுகமாகவும், ஒருவிதகுரோத மனப்பாண்மையுடன் இன்னும் தெளிவாகக் கூறுவதானால் சந்திரிகா விசுவாசத்துடன் இயங்கும் இராணுவ மற்றும் கடற்படை தலைமைகள் யாவும் சனாதிபதியின் பூரண 'அருட்பார்வை' சகல பேறுகளுக்கும் உள்ளானவர்கள்.

சந்திரிகாவின் அபிலாசைகளையே தேசிய நலன்களின் மொத்த வடிவமாகப் பார்ப்பவர்கள் இராணுவத்தினுள்ளும் கடற்படையினுள்ளும் குழப்பங்கள் முரண்பாடுகள் ஏற்படும் நிலையிலும் இராணுவ - கடற்படை விதிமுறைகளுக்கு மாறாக சேவை நீடிப்புகள் வழங்கி சனாதிபதியினால் ஆசீர்வதிக்கப்பட்டு அவருக்கு 'மட்டுமே' கட்டுப்பட்டுப் பணிபுரியும் நிலைக்கு ஆளானவர்கள்.

இதுவும் ஒளிவுமறைவான விடயமல்ல.

கடந்த சில மாதங்களாக ஊடகங்கள் அனைத்திலும் நார்நாராகக் கிழிக்கப்பட்ட விடயமே.

ஆக இராணுவமும், கடற்படையும் சந்திரிகாவின் ஆணைப்படி அவரைத் திருப்திப்படுத்தும், அதாவது ரணில் மேற்கொள்ளும் சமாதான நகர்வுகளுக்கு இடையூறாகச் சகல விதமான மறைமுக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் பிரதான ஆயுதக் கட்டமைப்புகளாகவே செயற்படுவதில் தீவிரமாக உள்ளன.

இவற்றின் கடந்தகால நடவடிக்கைகள் இதற்கு தெளிவான ஆதாரங்களாகும்.

யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவின் உயர்பாதுகாப்பு வலயக்குடியேற்றம் தொடர்பான அறிக்கையில், கடற்படைத்தளபதி தயாசந்தகிரியின் இந்திய விஜயங்களும், இராணுவத் தளபதி பலகல்லேயின் இரட்டை அர்த்த அறிக்கைகளும் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

சந்திரிகா ஆட்சிக்கால போர் நடவடிக்கைகளால் பெருத்த அனுகூலங்களைப் பன்முகப்பட்ட வகையில் அனுபவித்துவந்த இவர்கள் மீதான பல்வேறு குற்றச்சாட்டுகளும் மோசடி தொடர்பான விடயங்களும் தென்னிலங்கை ஊடகங்களில் இன்னமும் தொடர்ந்து வெளிவந்தவண்ணமே உள்ளது.

இதில் ரத்வத்தை மட்டும் எல்லாச் சிக்கலிலும் (கொலைவழக்குகள் உட்பட) வெளிப்படையாகவே மாட்டிக்கொண்டவராக தனது பழைய விலாசத்தை இழந்தவராகியுள்ளார்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின், இரண்டாவது சப்புமால்குமாரயா என்று வர்ணிக்கப்பட்டவரின், வெறும் லெப். கேணல் தரத்திலிருந்து 'ஜெனரல்' தரத்திற்கு சந்திரிகாவினால் ஏற்றிவைத்துக் கௌரவிக்கப்பட்டவரின் 'விறுத்தமே' இதுவென்றால். அவரின் தலைவி குறித்தும், அவரின் கீழான அதிகாரிகள் குறித்தும் விளக்கம் கூற வேண்டியதில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம்...' ஒரு குடம் பாலில் ஒரு துளிவிசம். இந்த நடைமுறைகளின் தாக்கங்களை எதிர்கொள்ள வேண்டியநிலை ரணிலுக்கு ஏற்பட்டிருப்பதுதான் பரிதாபம்.

அண்மையில் இராணுவப் புலனாய்வுத்துறை மீது ரணில் ஒரு பாய்ச்சல் பாய்ந்திருக்கிறார். சரியான பாய்ச்சல் தான் அவர்களின் செயற்பாடுகள் மீதான தனது சந்தேகத்தை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

சரியான தகவல்களைத் திரட்டுவதில்லை, இராணுவ ரகசியங்களைப் பாதுகாப்பதில்லை - விடுதலைப்புலிகள் கிழக்கில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தவறான புள்ளி விபரங்களை வழங்கியுள்ளனர் என்றெல்லாம் சினந்துள்ளதுடன், படையதிகாரிகள் முன்னிலையிலே அவர்கள் தமது நாவை அடக்கி வாசிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுமுள்ளார்.

இதனைவிட ஒரு படி மேலாக - பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, இராணுவப் புலனாய்வுத்துறை, அரசாங்கத்தை ஆபத்திற்குள் சிக்க வைத்து வருகிறது என்று அதே அதிகாரிகள் முன்னிலையில் கண்டித்துமுள்ளார்.

இவை எதனைக் காட்டுகிறது?

இராணுவம் ரணில் அரசுடன் ஒத்துழைப்பதாக இல்லை என்பதைத்தானே...

சந்திரிகாவின் அதிகார எல்லைக்குள் அவரால் அரசியல் மயப்படுத்தப்பட்ட படைகள் இயங்கும் வரைக்கும் ரணிலின் சமாதான நகர்வுகளுக்கு அவர்கள் இடையூறாகத்தான் இருப்பார்கள்.

இதற்கு மாற்று வழி காணும் வரை 'இரட்டை ஆட்சி நிலவும்' சிறிலங்காவில் ரணிலின் ஆட்சி மேற்கொள்ளும் அமைதியை நோக்கிய நிரந்தர சமாதான இலக்கு தூரத்துப் பச்சையாகவே இருக்கும்.

இதனை சர்வதேச சமூகமும் ஆழமாக யோசிக்க வேண்டிய நேரமும் இதுவேயாகும்.

## தூரனின் பார்வையில்

# சொல்ல வேண்டிய தருணத்தில், சொல்ல வேண்டியவர்களிடம், சொல்லப்பட்ட வார்த்தைகள்.

**அண்மையில** வன்னிக்கு வருகை தந்த பிரிட்டிஷ் குழுவினிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் கூறிய வார்த்தைகள் அர்த்தமும் ஆழமும் கொண்டவையாக மட்டுமல்ல, சரியான சமயத்தில் தெரிவிக்க வேண்டியவர்களிடம் தெரிவித்த விடயமாகவும் உள்ளது.

விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்த அறிவிப்பை, சமாதான முயற்சிகளுக்கான ஒரு நல்லெண்ணச் சமிஞ்சையாக சுயாதீனமாக வெளியிட்டு ஓராண்டுக்கு மேலாகிவிட்டது.

அதனையடுத்து அச்சமயம் புதிதாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கவின் அரசுடன் விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு, வரும்மாதத்துடன் ஓராண்டு நிறைவாகப் போகிறது.

இந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் நடந்து முடிந்த எத்தனையோ விடயங்கள் சர்வதேச சமூகத்தின் பார்வை வன்னியூடாக வடக்குக்கும் மற்றும் கிழக்குக்கும் விரிந்து, பரந்து, செறிந்து நிலை கொண்டு உறைந்தது ஒரு தனி வரலாறு.

யாழ் - கண்டி பிரதான நெடுஞ்சாலை திறக்கப்பட்டதன் பின்னர் வடக்குக்கும் தெற்குக்கும் இடையேயான போக்குவரத்து இயல்பாகியதும், அதுவே வடக்கிற்கும் சர்வதேசத்திற்குமான இணைப்புமாகியது.

ஆட்சியில் இருந்த சிங்கள அரசுகளின் அறிக்கைகளையும், தணிக்கைக்குள்ளான செய்திகளையும் மட்டுமே நம்பி வடக்குக் கிழக்கின் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படாத பகுதிகளைப்பற்றி ஒரு கற்பனாவாதக் காட்சியினை, அபிப்பிராயத்தை மனதில் உருவகித்துக் கொண்டு அதனையே உண்மையென வரித்துக் கொண்ட சர்வதேச சமூகத்தின் நோக்கில் அப்பகுதிகள் ஒரு அடர்காடாகவும், பயங்கரங்கள் சூழ்ந்த ஆபத்து மிக்க போர்ப்பிரதேசமாகவும், அங்குள்ளவர்கள் ஈவிரக்கமற்ற யுத்த மோகிகளாகவும் மட்டுமே உணரப்பட்டிருந்தது.

யாரை வந்தேறு குடிகள் என வர்ணித்தார்களோ, யாரைப்பயங்கரவாதிகள் என முத்திரை குத்தினார்களோ அவர்களுடன் சமாதானம் குறித்து சர்வதேச அரங்கில், சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்துடன் கூடிய அநுசரணையுடன், சமநிலையிலிருந்து பேச வேண்டிய நிலைமை சிறிலங்கா அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டின் பிரச்சினை, வெறுமனே ஆயுதந்தாங்கிய ஒரு குழுவால் மேற்கொள்ளப்பட்டு வந்த பயங்கரவாதப் பிரச்சினையல்ல, சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேசித் தீர்க்க வேண்டிய சிக்கலான, அரசியல் பிரச்சினையே என்பதை இன்று சர்வதேசம் ஒப்புக்கொண்டுள்ள அதேசமயம் விடுதலைப் புலிகள் தங்கள் மக்களின் அரசியல் - வாழ்வியல் - சமூகவியல் உரிமைகளுக்காகப் போராடி அந்த மக்களுக்கு தலைமைதாங்கி நிற்கும் ஒரேயொரு வலிமையான அரசியல் இலக்குடன் ஆயுதம் தாங்கிப் போராடும் சக்தி என்பதும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்டுள்ளதையே இந்த ஓராண்டுகால நிகழ்வுகள்யாவும் நிரூபித்து வருகின்றன.

அதன் ஓரங்கமே பிரிட்டிஷ் தூதுவர் தலைமையிலான குழுவின் வன்னிக்கான வருகையும், அரசியல்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பும்...

பிரிட்டன் விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பு எனக்கூறி, பிரிட்டனில் அதன் செயற்படுகளை தடைசெய்துள்ள நாடுகளில் ஒன்று என்பதை நாம்நினைவிற் கொள்ளுதல் இக்கட்டத்தில் அவசியமாகும்.

விடுதலைப்புலிகளுடனான சந்திப்பும் பேச்சுக்களும் மிகவும் முன்னேற்றகரமாக இருந்ததாகவும், பேச்சுக்களில் எட்டப்பட்ட முடிவுகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் முன்னின்று செயற் படப்போவதாகவும் பேச்சின் முடிவில் பிரித்தானியத் தூதுவர் தெரிவித்திருப்பதானது பிரித்தானியாவின் அணுகுமுறையில், கருத்தியல் நோக்கில் ஏற்பட்டுள்ள ஆக்க பூர்வமான மாற்றத்தையே எடுத்துக்காட்டுகிறது.

இந்தச் சந்திப்பின் போதுதான் அரசியல்துறைப் பொறுப்பாளர், 'யுத்தநிறுத்தம், மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை ஏற்பட்டு ஓராண்டு ஆகிவிட்ட போதிலும் சமாதானம் என்பது அதனை அனுபவிக்க வேண்டிய பொதுமக்களைச் சென்றடையவில்லை. இதற்கு உயர்பாதுகாப்பு வலயம் குறித்த நெருக்கடிகளே காரணம்' என்று தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம், பொருளாதாரத்தடை நீக்கம், விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம், தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள், ஒஸ்லோ பேச்சுவார்த்தை, உதவிவழங்கும் நாடுகளுடனான பேச்சுவார்த்தை,

அரசியல் தீர்வுக்கான அடிப் படைகள் குறித்த - குறிப்பாக சமஷ்டி அரசியலமைப்புக் குறித்த - பேச்சுவார்த்தை, உபகுழுக்கள், செயற்குழுக்கள் அமைப்பு, என எத்தனையோ கட்டங்கள் தாண்டிவிட்ட நிலையிலும் மக்களின் இயல்புவாழ்க்கை என்பது, அதாவது பல வருடங்களாக பல்வேறு இடங்களுக்கு திசை பெயர்ந்தும் - இடம் பெயர்ந்தும் - இடம் பெயர்ந்து புலம் பெயர்ந்தும், தம் வாழ்வியல் கலாசார, மற்றும் பண்பாட்டு வேர்களை அறுத்துக் கொண்டு, எண்ணற்ற துன்பதுயரங்கள் மற்றும் இழப்புக்களைத் தாங்கிக் கொண்டு, இன்னமும் ஒரு நிலைப் படாமல் ஏங்கும் மக்களின் வாழ்வுக்கு ஒரு முடிவு கிடைக்கவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

போரினால் இடம் பெயர்ந்த மக்கள் சமாதான சூழலில் தம் சொந்த மண்ணில் மீண்டும் வேரூன்றி தம் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்ளும் உரிமையை இயல்பாகவே கொண்டவர்களாவர்.


சமாதான சூழலிலும், பேச்சுவார்த்தைகள் ஒரு இலக்கு நோக்கி கட்டம் கட்டமாக நம்பிக்கைதரும் நிலையில் நகர்ந்து கொண்டிருப்பதாக அரசும், சர்வதேச சமூகமும் உறுதி செய்து வரும் வேளையிலும், வெறுமனே இராணுவ நலன்களைப் பிரதானப்படுத்தி, 'பாதுகாப்பு' என்ற தந்திரோபாய சொல்லைப்பயன்படுத்தி, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு உயர்பாதுகாப்பு வலயம் எனப் பெயரிட்ட மக்களின் சொந்தக் குடியிருப்பு மற்றும் அவர்களின் தொழில்சார் பகுதிகளில், அந்த மக்களின் சகலவளங்களையும் நிர்மூலம் செய்து விட்டு தொடர்ந்தும் நிலை கொண்டிருப்பதென்பது ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறல் - அதுவும் அரசாங்கத்தினால் பகிரங்கமாகவே மேற்கொள்ளப் பட்டு வரும் மனித உரிமைமீறல் நடவடிக்கைகளேயாகும்.

எந்தவகையிலும் ஓர் அரசியல் தீர்வு இந்த பேச்சுவார்த்தை மூலம் எட்டப்பட்டே தீரும், அது சகல மக்களுடைய அபிலாசைகளையும் நிறைவேற்றியே தீரும். அதற்காகச் சகல வழிகளிலும் அர்ப்பணிப்புச் செய்வதற்கு மக்களைத் தயாராக இருக்குமாறும், அரசுக்கு ஆதரவளிக்குமாறும் கூறும் அரசாங்கம் தமிழ் மக்களின் - அதுவும் இடம் பெயர்ந்த தமிழ்மக்களின் உரிமை நிலங்களில் அவர்கள் மீண்டும் குடியேறத்தடையாக உள்ள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை, மக்களின் - அதற்குரிய மக்களின் - பாவனைக்கு, அனுமதிக்க அயல்நாடுகளின் இராணுவ நிபுணர்களின் ஆலோசனையைக் கோருவதென்பது ஒரு அபத்தமான அணுகுமுறையேயாகும்.

ஒரு இராணுவ அதிகாரியானவர் இராணுவக் கண்ணோட்டத்திலேயே பிரச்சினைகளை அணுகுவார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமேயாகும்.

மக்களின் இயல்பு வாழ்க்கைக்கே உறுதிவழங்க முடியாத நிலையில், மக்கள் தங்கள் இடங்களில் இருந்து அந்நியப்பட்டு அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், அவர்களின் சொந்த நிலங்களில் ஆக்கிரமிப்பு இராணுவம் நிலை கொண்டு

(15ம்பக்கத்தொடர்ச்சி...)



# யப்பானின் பிரவேசம்

**நிலாந்தன்**



**நோர்வேயின** பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் கடந்த ஆண்டின் இறுதியில் செய்தியாளர் சந்திப்பொன்றில் பின்வருமாறு கூறியிருந்தார்.

"கடந்த சில தசாப்தங்களாக ஒரு கொடை வழங்கும் நாடு என்றிருந்து வந்த தனது மரபுரீதியான பாத்திரத்திலிருந்து யப்பான் வெளியில் வந்துகொண்டிருக்கிறது. அது பெரியதொரு அரசியல்ப் பாத்திரத்தை வகிக்க விரும்புகிறது."

கடந்த மாதம் யப்பானுக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது விஜயத்தின் முடிவில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் பின்வருமாறு கூறியிருந்தார். "சமாதான முயற்சிகளில் இரண்டு கூறுகள் (Segments) உண்டு. ஒன்று அரசியல் ரீதியிலானது. அதில் நோர்வே தனக்குரிய பொறுப்புக்களைச் செய்து வருகின்றது. மற்றது அபிவிருத்தி, அதைப்பொறுப்பெடுக்க யப்பான் முன்வந்திருக்கிறது.

கெல்கேசனும் ரணிலும் கூறுவது போல யப்பான் இப்பொழுது இலங்கைத்தீவின் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் நிதிரீதியிலான ஒரு அனுசரணையாளராக மாறிவருகிறது.

இரண்டாம் உலகமகாயுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டபின் யப்பான் உலக விவகாரங்களில் ராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தலையிடுவதிலிருந்து கணிசமான அளவு ஒதுங்கியிருந்து வந்தது. ஒரு கொடை வழங்கும் நாடாக அது தனது பாத்திரத்தை மட்டுப்படுத்தி வந்திருந்தது.

கெடுபிடி யுத்தத்துக்குப் பிந்திய உலகில் பத்து வருடங்களுக்கு முன்பு கம்பூச்சியாவில் ஐ.நா தலைமையிலான அமைதி காக்கும் பணிகளில் யப்பான் ஈடுபட்டது. இது யப்பானியருக்கு ஒரு வெற்றிகரமான உற்சாகமூட்டும் அனுபவமாக அமைந்தது.

அதன்பின் ஆங்காங்கே அமைதிகாக்கும் பணிகளில் யப்பான் ஈடுபட்டு வந்த போதிலும் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னரான அதன் வெளியுறவு அணுகு முறைகளில் சமீப காலங்களில் தான் மாற்றங்கள் உண்டாக்கி யிருப்பதை அவதானிக்க முடிகிறது.

தற்சமயம் யப்பானின் பிரதமராய் இருக்கும் யுனிசிரோ கோற்சுமியே இந்தக் கொள்கை மாற்றத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு மே மாதம் சிட்னியில் உரை நிகழ்த்திய கோற்சுமி யுத்தத்தால் சிதைந்த நாடுகளில் சமாதான முயற்சிகளில் நேரடியாக ஈடுபட்டு நாட்டை மீளக்கட்டியெழுப்ப யப்பான் தயார் என்று தெரிவித்திருந்தார்.

இதன் படி யுத்தத்துட் சிக்கிய நாடுகளில் செய்யப்படும் சமாதான முயற்சிகளில் யப்பான் கடன் மற்றும் கொடைகளின் மூலம் சமாதானத்துக்கான ஒரு நிதித்தளத்தை உருவாக்குவதில் ஈடுபடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இதற்கான விசேச தூதுவரே யசுஷி அகாஷி. இவர் இனி ஒவ்வொரு மாதமும் வன்னிக்கு வந்து போவார் என்று கூறப்படுகிறது.

யப்பானின் கொள்கை மாற்றம் பற்றி அகாஷி கடந்த வருட இறுதியில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அது ரோக்கியோ விலிருந்து வெளிவரும் டெய்லி யோமியூரி (Dailyomiuri) என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அந்தக்கட்டுரையின் படி நிரந்தரத் தீர்வு வரும் வரை காத்திருக்காது உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு குறுகிய கால உதவித் திட்டங்களுடன் யப்பான் களத்திலிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மீளக்குடியேறிகளுக்கு உதவுதல், பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துதல், பள்ளிக் கூடங்களைத் திருத்துதல், கண்ணிவெடிஅகற்றல் மற்றும் உடனடித் தேவையாய் இருக்கும் உட்கட்டுமானங்களை உருவாக்குதல் போன்றவை இத்தகைய குறுகிய காலத் திட்டங்களுக்குள் அடங்கும் என்று அகாஷி கூறுகிறார்.



இலங்கைத் தீவிலும் ஆப்கானிலும் நிலைமைகள் இடைமாறு காலகட்டத்திலிருப்பதாக அகாஷி கூறுகிறார்.

எனவே அவர்களுடைய புதிய கொள்கையின் படி இங்கு நோர்வேயின் அனுசரணையாளர் முயற்சிகளில் யப்பானும் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கிவிட்டது.

யப்பானின் பிரவேசம் பற்றி பலவிதமான வியாக்கியானங்களும் உண்டு.

மேற்குலகின் ஆசீர்வாதத்துடன் செய்யப்படும் சமாதான முயற்சிகளில் நிதிவிவகாரங்களைக் கையாள்வதற்கென்று மேற்குலகமே யப்பானை ஊக்குவித்திருப்பதாக பரவலாக நம்பப் படுகிறது.

ஏற்கனவே தனது பூகோள வர்த்தகத்தில் இப்பிராந்தியத்தை அதிகம் யப்பானுடன் சேர்த்துப் பங்கிடும் மேற்குலகம் சமாதான விவகாரத்திலும் யப்பானுக்குரிய பங்கைத்தந்திருப்பதாக நம்பப்படுகிறது.

மேலும் கொக்குத் தொடுவாயிலிருந்து புல்மோட்டை வரையிலுமான தமிழர்களின் கடலோரங்களில் காணப்படும் இல்மனைற் தாதுப் பொருளை அதிகம் வாங்கும் நாடாகவும் யப்பானே காணப்படுவதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

அரிதானதும் பெறுமதிமிக்கதுமாகிய ரைற்ரேனியம் (Titanium) என்ற உலோகம் இல்மனைற் மூலப்பொருளில் இருந்தே பெறப்படுகிறது. இதுதான் விமானங்கள், ரொக்கெற்றுக்கள், சற்றலைற்கள் மற்றும் விண்வெளிவாகனங்கள் போன்றவற்றைச் செய்யப்பயன்படுத்தப்படுகிறது என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

இத்தகைய பல வியாக்கியானங்களின் மத்தியிலும் யப்பானின் பிரவேசத்தோடு இலங்கைத் தீவின் சமாதான முயற்சிகள் ஒரு புதிய கட்டத்துள் பிரவேசித்துள்ளன.

இதுவரை காலமும் கூட்டறிக்கைகளாகவும் பிரகடனங்களாகவும் காணப்பட்டு வந்த பல விசயங்கள் இப்பொழுது பிரயோக நிலைக்கு வரத் தொடங்கிவிட்டன.

அதாவது சமாதான முயற்சிகளில் மெய்யாகவே பணம் புரளும் ஒரு நிலை உருவாகிவருகிறது.

இது தவிர்க்கவியலாதபடி பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அவற்றின் பிரயோக நிலைக்கு இட்டுச் செல்லப் போகிறது.

இதனால் சமாதான முயற்சிகள் மேலும் சீரியசானவைகளாக உருவாக முடியும்.

குறிப்பாக இவ்வாண்டின் முற்கூறில் ரோக்கியோவில் நடக்க இருக்கும் இலங்கைக்கான அபிவிருத்தி மையத்தின் மாநாட்டில் மேலும் நிதியுதவி கிடைக்கலாம் என்றும் சமாதான முயற்சிகளில் நிதிப்புழக்கம் மேலும் அதிகரிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதோடு ஆறாம் கட்டப் பேச்சு வார்த்தைகள் யப்பானில் தான் நடக்கவிருக்கின்றன.

இந்நிலையில் நடக்கவிருக்கும் ரோக்கியோ மாநாட்டில் கிடைக்கப்போகும் நிதியுதவியை நம்பித்தான் ரணில் இவ்வாண்டின் நடுக்கூறில் சமாதானம் யுத்தத்துக்கு திரும்பிச் செல்ல முடியாத ஒரு வளர்ச்சியைப் பெற்றுவிடும் என்று கூறினாரோ என்னவோ?

ஆனால் பொருளாதார நிபுணர்கள் ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறார்கள். இலங்கைத்தீவின் சமாதானம் "யுத்தமும் இல்லை சமாதானமும் இல்லை" என்ற ஒருவித தொங்கு நிலையில்தான் இப்பொழுதுமிருப்பதாக.

யுத்தத்திற்கும் சமாதானத்திற்குமிடையில் ஊசலாடியபடி அல்லது தளம்பியபடியிருக்கும் இந்த ஈரூடக அரசியல், பொருளாதார மீட்சிக்கு உகந்தது அல்லவென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

உதாரணமாக அதிகம் சனச்செறிவுள்ள வடக்கில் மீன்பிடிப்பதிலிருக்கும் கட்டுப்பாடுகள் பொருளாதாரத்தை மோசமாகப் பாதிக்கக் கூடியவை. தமிழர்களின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை உடனடியாக அதிக வருமானமீட்டும் ஒரு துறையாக இது காணப்படுகிறது.

மற்றது கண்டிவீதி இன்னமும் முழுமையாகத் திறக்கப்படவில்லையென்பது. கண்டி வீதி ஒவ்வொரு நாளும் சுமார் பத்து மணிநேரமே திறக்கப் படுகிறது. அதோடு ஞாயிற்றுக் கிழமைகளில் வீதி திறக்கப்படுவதில்லை. இதனால் ஒரு நாளில் சரிபாதிக்குமேல் வர்த்தக நடவடிக்கைகள் முடக்கப்படுகின்றன. இதுவும் வடக்கில் பொருளாதார மீட்சியின் வேகத்தைத் தடுக்கக் கூடியது.

மற்றது அகதிகள். மொத்த சனத்தொகையில கணிசமான அளவினர் நிவாரணத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் வரை பொருளாதாரத்தை முழு அளவில் திட்டமிடுவது சாத்தியப்படாது. அவர்களை முதலில் மீளக்குடியமர்த்த வேண்டும். அதற்கு உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

அதோடு முக்கியமாக தமிழ்ப் பகுதிகளில் முதலீடு செய்யத் தயங்கும் வர்த்தக நிறுவனங்களின் பயங்களைப் போக்குவதற்கும் முதலில் இயல்பு நிலை உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்நிலையில் யப்பானின் வருகையானது சமாதான முயற்சிகளை பொருளாதார அர்த்தத்தில் யுத்தத்திற்கு திரும்பிச் செல்லவியலாத ஒரு முதிர்ச்சிக் கட்டத்தை நோக்கி உந்தித் தள்ளும் நோக்கிலானது என்று நம்ப இடமுண்டு.

ஆனால் இயல்பு வாழ்க்கை உறுதிசெய்யப்படாத பட்சத்தில் சமாதானத்துக்கான நிதியுதவி எனப்படுவது உற்பத்திக்கான முதலீடு என்பதாக அமையாது அகதிகளுக்கான நிவாரணமாக மட்டும் சுருங்கிவிடும் ஆபத்தே அதிகமுண்டு.


## ஈழநாதம் மக்கள் நாளேட்டின் ஆண்டு மலருக்கான ஆக்கங்கள்

ஈழநாதம் மக்கள் நாளேடு எதிர் வரும் 19.02.2003 அன்று 14 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. இதனை முன்னிட்டு வெளிவரவுள்ள ஆண்டு மலரில் பிரசுரிப்பதற்கு

சிறுகதைகள் | கவிதைகள் | அரசியல், சமூக, பொருண்மியம் சார்ந்த கட்டுரைகள்

என்பன ஆக்க கர்த்தாக்களிடமிருந்து கோரப்படுகின்றன. ஆக்கங்களை 25.01.2003 இற்கு முன் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் கிடைக்கக்கூடியவாறு நேரில் அல்லது தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றனர்.

முகவரி :
ஆசிரியர், ஈழநாதம்,
முதன்மைச் சாலை,
கிளிநொச்சி.

# நான்காம் கட்டத்தில் வலியுறுத்தப்பட்ட மூன்று விடயங்கள் - தமிழர் உரிமையைப் பெறுதலின் அடிப்படைகள்

**முதற்சுற்றுப்** பேச்சுவார்த்தைகளின் நான்காம் கட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஊடகங்களுக்குத் தகவல் வழங்குகையில் மூன்று முக்கிய விடயங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்.

முதலாவது, நிலையான அரசியற்தீர்வு எட்டப்படும்வரை ஆயுதக்களைவு என்ற பேச்சுக்கே இடமில்லை. அதைப்பற்றிய பேச்சையே எடுக்க வேண்டாம்.

இரண்டாவது, இயல்பு நிலை ஏற்படுத்தல் - மீள்குடியேற்றத்துக்கான உபகுழுவில் இருந்து விலகிக் கொண்டமை பற்றியது..

மூன்றாவது, எமது மக்களை மீளக்குடியமர்த்தும் செயற்பாடு நடைபெறாவிட்டால் பேச்சுவார்த்தை மேற்கொண்டு நகராது.


மேற்கூறிய விடயங்கள் மூன்றும் புலிகள் தமது நிலைப்பாட்டில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிப்பது போலச் சித்திரிக்கப்படக்கூடும். இனவாதிகளும் அவர்களைக் கிளப்பிவிட்டுக் குழப்பத்தைத் தோற்றுவிக்க வெளிப்படையாகவே செயற்படும் சந்திரிகா + ஜே.வி.பி. + பிக்குகள் கூட்டணிகளும் "குய்யோ, முறையோ" எனக் கூக்குரலிடக்கூடும். இவர்களின் உருவேற்றலில் தான்தோன்றித் தனமாக இயங்க முற்படும் சிறிலங்கா இராணுவம் கடுப்படையவும் கூடும்.

ஆனால், புலிகளின் இந்நிலைப்பாட்டுக்குக் காரணம் என்ன? அடிப்படை என்ன? அவர்களை இந்நிலைப்பாட்டுக்குத் தள்ளியது எது? அல்லது எவை? என்னும் கேள்விகளுக்கு விடை காண்போமானால் மேற்சொன்ன மூன்று விடயங்களுமே இன்றைய காலகட்டத்தில் தமிழர் தரப்பில் அழுத்திச் சொல்லப்பட்டிருக்க வேண்டியவையே என்பது தெளிவாகும்.

இரண்டு தசாப்தங்களாக நடைபெற்ற தீவிர யுத்தத்தால் நமது வாழ்விடங்களிலிருந்து வெளியேறி அங்கும் இங்கும் அலைந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் தமிழ்மக்கள் போர் ஓய்வு ஏற்பட்டவுடன் முதலில் எதிர்பார்த்திருப்பது தமது சொந்தக் கிராமங்களில் மீண்டும் குடியேறி வாழ்வதற்கான வாய்ப்பு தமக்குக் கிடைக்குமா? என்பதையே. "ஊர்திரும்புதல்" என்ற இந்த வாய்ப்புக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள் அவர்களுடைய இந்த முதல் எதிர்பார்ப்பு பூர்த்தி செய்யப்படாவிடில் சமாதானம் - பேச்சு வார்த்தை என்னும் செயற்பாடுகள் அவர்களைப் பொறுத்தவரை காலத்தை இழுக்கும் வர்ணஜாலங்களாகவே பார்க்கப்படும்.

இந்தப் பின்னணியில் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளான புலிகளுக்கு இந்த மீள்குடியேற்றம் நடைபெறாத சூழலில் பேச்சுவார்த்தை மேசையில் அமர்வதென்பது மிகவும் சிக்கலானதாகவே அமையும். அதனை அர்த்தபூர்வமானதாகத் தமிழ் மக்கள் பார்க்கமாட்டார்களென்பது பேச்சுவார்த்தை மேசைகளின் பெறுபேறுகள் மீது அவர்கள் அவநம்பிக்கை கொள்ளவுமே வழிவகுக்கும். என்பதையும் விளக்கவேண்டிய அவசியம் இல்லை.

எனவே மீள்குடியேற்றம் நடைபெறாதவரை பேச்சுக்களை அப்பால் நகர்த்துவதென்பது தமிழர்தரப்பினைப் பொறுத்



தவரை எதுவித அர்த்தமும் அற்றதொன்றாகும்.

இந்தச் சூழலில் இயல்பு நிலை ஏற்படுத்தல் மற்றும் - மீளக்குடியமர்வுக்கான உப குழுவில் இருந்து விலகிக் கொள்வதெனப் புலிகள் தெரிவித்துள்ளனர். இந்த நடவடிக்கை எவ்வாறானது? தாம் வலியுறுத்தும் ஒரு விடயம் குறித்துப்பேசி முடிவுகள் எடுத்து, நடை முறைப்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட உப குழுவில் இருந்து விலகிக் கொள்வது



இராணுவத்தின் பொதுக் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா வினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையேயாகும்.

"உயர்பாதுகாப்பு வலயங்களில்" மக்களைக் குடியமர்த்தினால் அது இராணுவத்தின் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கும். அது புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையிலான இராணுவ சமபல நிலையைப் பாதிக்கும். ஆகையால் வலயங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் " என்றே பூச்சாண்டி காட்டுகிறார்..

இக்கட்டத்தில் அரசின் பத்திரிகை நிறுவனமான 'லேக் ஹவுஸி'ன் தமிழ் ஏடான தினகரன் வெளியிட்ட செய்தி முக்கியம் பெறுகிறது. "உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையைச் சிக்கலாக்கியது யார் என்பது அம்பலம்" என்ற தலைப்பில் 10. 01 . 2003 அன்று தினகரன் செய்தி ஒன்றை வெளி யிட்டது. அதன்படி, "ஜெனரல் பொன்சேகா தயாரித்த மீள் குடியேற்றத்துக்கான திட்ட வரைபில் புலிகளைப் 'பயங்கரவாதிகள்' எனக்குறிப்பிட்டதை நீக்கும் படியும், வேறுசில திருத்தங்களையும் கூறிய பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இராணுவத் தளபதியிடம் திட்ட வரைபை ஒப்படைத்து 'திருத்தப்பட்ட பிர தியை' கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கும்படி கூறினார். ஆனால் ஜெனரல் பலகல்ல



இதற்கு மாற்றுவழி தேடுவதென்பது காரியசாத்தியமானதல்லவா?

இவ்வுபகுழு செயற்படாது போய், இராணுவம் மீள் குடியமர்வுக்குத் தொடர்ந்தும் தடை விதித்தால் என்ன செய்வது? அதற்குப் பரிகாரமாகவே முதலில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே மக்களைக் குடியமர்த்தல், அங்கு மக்கள் வீடுகளில் முகாமிட்டுள்ள இராணுவம் வெளியேறி அவற்றை உரிமையாளர்களிடம் ஒப்படைத்தல் உள்ளிட்ட ஒரு வேலைத்திட்டம் இனங்காணப்பட்டுள்ளது. இதனையும் நடை முறைப்படுத்த முடியாது போனால்? அதற்கான பதில்தான் "பேச்சுவார்த்தை மேற்கொண்டு நகராது" என்பதாகும்.

இது ஒரு கடும் போக்கா? பேச்சுக்களைத் தடம்புறளச் செய்துவிடக் கூடியதா? அப்படியல்ல. பேச்சுவார்த்தை மேசைகளில் அரசுகளால் கடைப் பிடிக்கப்படும் 'பேசிக் காலத்தைக் கடத்தல்' அல்லது 'ஒத்திவைத்தல்' அல்லது 'காலத்தை நீட்டிச் செல்லுதல்' மூலம் எதிர்த்தரப்பால் முன்வைக்கப்படும் கோரிக்கையைச் 'செயலிழக்கச் செய்துவிடும்' அல்லது 'பிசுபிசுக்கச் செய்துவிடும்' போக்குக்கு இடமளிக்காத உபாயமே இதுவாகும். அத்தோடு இது தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியமானதொரு மனித உரிமைப் பிரச்சினையும் ஆகும். ஆகவே அதனை வென்றெடுப்பது தமிழர் தரப்பில் பேச்சுவார்த்தை மேசையில் அமரும் புலிகளின் கடமையேயாகும்.

அதைவிட இந்த மனித உரிமைப் பிரச்சினையையே வென்றெடுக்கமுடியாது போனால் அதிகாரப்பரவலாக்கல், சமஸ்டி அரசியலமைப்பு போன்ற நிரந்தரத் தீர்வுக்கான 'பென்னம் பெரிய' விடயங்களைவென்றெடுப்பது எங்கனம்?

இப்போது நாங்கள் மிக முக்கியமான பிரச்சினையான 'ஆயுதக் களைவு' பற்றி நோக்குவோம். இவ்விடயத்தில் ஆலோசகரது கருத்து மிகச் சரியானதும் சொல்லப்படவேண்டிய இடத்தில், அதற்கான நேரத்தில், அதற்குரிய முறையில் சொல்லப்பட்டிருப்பதுமாகும்.

புலிகள் இராணுவ மேலாதிக்க நிலையில் உயர்ந்த சமபல நிலையில் இருக்கும் போதே தனது நிமிர்த்தத்தையும் ஆதிக்க மனோபலத்தையும் அடாவடித்தனத்தையும் சகல விடயங்களிலும் காட்டும்: பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பணிப்பையே நிராகரிக்கும் அல்லது செயற்படுத்தாது விடும் தளபதியைக் கொண்ட இராணுவம், ஆயுதங்களை ஒப்படைத்து விட்டுப்புலிகள் பேச்சு வார்த்தைக்குப் போனால் எவ்வாறு நடந்து கொள்ளும்?

தமிழர்தரப்பு தனது பேரம் பேசும் பலத்தைக் கைவிட்டு விட்டு 'வெறுங்கை யோடு' பேச்சுக்குப் போனால் 'காலி முகத்திடலில் சத்தியாக்கிரகிகளுக்கு' ஏற்பட்டநிலையே மீளவும் அரங்கேறிவிடவும் கூடும்.

எனவே தமிழர் தரப்பு பேச்சு மேசைகளில் தற்போது கடைப்பிடிக்கப்படும் சாணக்கியமிக்க இராஜதந்திர அணுகுமுறையைத் தொடர்வதென்பது தமிழரின் உரிமையைப் பேசிப் பெறுவதற்கான தவிர்க்க முடியாத சரியான வழியாகும்.

சரியான நடவடிக்கையா?

இந்த விலகலுக்கான நியாயப்பாடு, 'பேசிக்காலத்தைக் கடத்தல்' என்பதற்குப் புலிகள் புலிகள் ஆயுதக்களைவுக்கு உட்பட வேண் டும்" என்பதே சரத்பொன் சேகாவின் அறிக்கையின் சாரமாகும்!

**புலிகள் இராணுவ மேலாதிக்க நிலையில் உயர்ந்த சமபல நிலையில் இருக்கும் போதே தனது நிமிர்த்தத்தையும் ஆதிக்கமனோபலத்தையும் அடாவடித்தனத்தையும் சகல விடயங்களிலும் காட்டும்: பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பணிப்பையே நிராகரிக்கும் அல்லது செயற் படுத்தாதுவிடும் தளபதியைக் கொண்ட இராணுவம், ஆயு தங்களை ஒப்படைத்து விட்டுப் புலிகள் பேச்சுவார்த்தைக்குப் போனால் எவ்வாறு நடந்து கொள்ளும்?**

இடங்கொடுக்க விரும்பாததன் அடிப்படையிலானதே ஆகும். அதாவது மீள்குடியமர்வுக்கான அடிப்படை விடயங்களை ஆராய்தல் என்னும் தலைப்பின் கீழ் பேசிப் பேசி மேலும் மேலும் காலத்தை இழுத்தடிப்பதை புலிகள் அனுமதிக்கத் தயார் இல்லை என்பதே அதன் அர்த்தமாகும். அத்தோடு இக்குழுவின் மறுதரப்பில் கலந்து கொண்டவர்கள் சிறிலங்கா இராணுவத்தின் தீவிர போர் முனைப்பும் தமிழர் விரோதப் போக்குமே கொண்ட தளபதிகள் என்பதும் கவனிக்கத்தக்கது. இவர்களது நடவடிக்கைகளே மேற்படி உபகுழுவின் மீது

**இ.விவேகானந்தன்**

தமிழ் மக்களும் புலிகளும் நம்பிக்கையிழக்கச் செய்தவைகளாகும். இந்நம்பிக்கையிழப்புக்குள் தள்ளிய மிக உடனடிக்காரணியாக அமைந்தது உயர்பாதுகாப்பு வலயங்களில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான செயற்திட்டமாக யாழ் குடாவுக்கான சிறிலங்கா

அதாவது, தமிழர் தரப்பினால் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாததொரு நிபந்



தனையுடன் மீள்குடியமர்வைப் பிணைப்பதன் மூலம் தமது இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதே சரத்பொன்சேகாவின் நிலைப்பாடாக இருக்கிறது. இதற்கு அவர் "சாதாரண மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினால் மிக இறுக்கமாகக் கட்டியமைக்கப்பட்ட தமது அதியுயர் பாதுகாப்பு


'எதுவித திருத்தங்களையும் மேற்கொள்ளாது' அறிக்கையைக் கண்காணிப்புக் குழுவிடம் கொடுக்க, அது புலிகளிடம் சேர்க்கப்பட்டது. இதுவே புலிகளை ஆத்திரமடையச் செய்தது" என்று விபரிக்கிறது தினகரன்.

இச் செய்தியின்படி மிகப் பிந்திய முறுகலுக்கு இராணுவம் மீது பொறுப்பை 'எறிந்திருக்கும்' அரசு இதன் மூலம் இராணுவத்துக்கு ஒரு 'குட்டு' வைத்திருப்பதாக கொள்ளலாமா? எது எப்படியிருப்பினும் மீள்குடியேற்றம் மற்றும் அரசின் தீர்மானங்களை அமுலாக்கல் ஆகியவற்றில் இராணுவத்தின் நிலைப்பாட்டினை படம் பிடித்துக் காட்ட இது ஒரு மிகச்சிறந்த உதாரணமாகும்.

இப்போது நாங்கள் அரசியல் ஆலோசகர் தெரிவித்த விடயங்களுக்குத் திரும்பிச் செல்வோம். மேற்படி உபகுழு இயங்குவதால் பயனில்லை. கடும்போக்குக் கொண்ட இராணுவ அதிகாரிகளுடன் வீணே பேசி எமது மக்களை விரக்தியடையச் செய்வதை விட அவ்வுபகுழுவில் இருந்து விலகி,

# நறுக்கென...

## ஆட்சிமாற்றத்திற்கான திரை மறைவுச் 'சதி'கள்



ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை பதவியிழக்கச் செய்து விட்டு, மீண்டும் பொதுசன ஐக்கிய முன்னணியினர் ஆட்சியை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் முடிந்து விட்டதாகவும், எதிர்வரும் யூன்மாதமளவில் இந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விடும் என்றும் சிறிலங்காவின் தலைநகர் கொழும்பின் அரசியல் வட்டாரங்களில் பலமாகப் பேசப்படுகின்றது.

இப்போது யாருக்கு என்னபதவியைக் கொடுப்பது என்பதில் தான் இழுபறி நிலை காணப்படுவதாகவும் இதுவும் வெகு விரைவில் தீர்க்கப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

இதில் ஜே.வி.பியினருக்கு ஐந்து அமைச்சுக்கள் வழங்கப்படக்கூடும் என்றும் மீண்டும் பிரேமதாச காலத்து மாவட்ட அமைச்சர் என்ற பதவி நிலை உருவாக்கப்படலாம் என்றும், அதன்மூலம் பொது சன ஐக்கிய முன்னணிக்கு தாவக் கூடிய ஐ.தே. முன்னணி அரசினைச் சேர்ந்த அதிருப்தி உறுப்பினர்களின் பதவி வேட்கை தீர்க்கப்படக்கூடும் என்றும் பேச்சடிபடுகின்றது.

இது தொடர்பாக தொடர்ச்சியான பல சந்திப்புக்கள் பகிரங்கமாகவும் - ரகசியமாகவும் பல வேறுதனிப்பட்ட அரசியல்வாதிகளுடனும், ஏனைய கட்சிகளுடனும் சந்திரிகாவினாலும், அவரது நம்பிக்கைக்குரிய ஆலோசகர்களாலும், கட்சிப் பிரமுகர்களாலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இது தொடர்பாக ஜே.வி.பியினரின் பேரம் பேசும் தன்மை அதிகரித்துவருவதும், ஏனைய இடதுசாரிக்கட்சிகளை பொ.ஐ.முன்னணியிலிருந்து ஓரம் கட்டி அவரை அரசியல் அரங்கிலிருந்து தனிமைப்படுத்தும் ஒரு 'சதியை' அவர்கள் மிக நாசூக்காக மேற்கொண்டு வருவதும் பகிரங்கமான விடயமாகிவிட்டது. இந்த ஆட்சி மாற்றத்துக்கான அயல் நாடொன்றின் உதவி - ஆலோசனை மற்றும் ஆதரவினைப் பெறும் முயற்சியில் சந்திரிகாவின் வெளியுறவு ஆலோசகரும் முன்னாள் அமைச்சரும், எஜமான விசுவாசியுமான கதிர்காமர் தீவிரமாக இயங்கி வருகிறார் என்றும் தெரியவந்துள்ளது.

'தற்போது பேச்சுவார்த்தை நாடு இரண்டாக பிளவுபடுவதற்கே வழிவகுக்கும்' என்ற மூல வாக்கியத்தையே 'கதிர்காமர்' அழுத்தமாக உச்சரிக்கத் தொடங்கியுள்ளமையைக் கவனிக்க வேண்டும்.

'எப்படி ஆட்சிமாற்றம் ஏற்படும் என்பதை இப்போது விபரிக்க முடியாது. ஆனால் ஆறுமாதங்களுள் அது நடக்கும்.' என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பொ.ஐ. முன்னணி உறுப்பினர்கள் மத்தியில் பேசியுள்ளமையையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எல்லாரும் சந்திரிகாவின் வசமுள்ள நிறைவேற்று அதிகார வலுமீதே நம்பிக்கை கொண்டு இயங்குகின்றனர் என்பது வெளிப்படை. ஒரு முக்கிய தகவல் ஜே.வி.பி.யினர் பிரதமர் பதவியை இலக்கு வைத்து பேரம் பேசுகின்றனராம்...

ஒட்டகத்துக்கு கூடாரத்திற்குள் ஒதுங்க இடங்கொடுத்த கதையாகிவிடும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கூறும் எச்சரிக்கைகளை 'அநுரா' தலைமையான கும்பல் உதாசீனம் செய்வதாகவும் கூறப்படுகிறது. அது சரி ஜே.வி.பி.யினர் பிரதமர் பதவியை குறிவைத்தால் அநுரா எதனைக் குறிவைக்கிறார் என்ற கேள்வி எழுகின்றதல்லவா?

அது புதிதாக உருவாக்கிக் கொள்ள நினைத்திருக்கும் இணை அல்லது துணை சனாதிபதிப்பதவியையேயாகும்...
பண்டாரநாயக்கா குடும்பமா? கொக்கா?

## கதிர்காம தேரரின் (!?) நச்சுக்கருத்துக்கள்



சிங்களத் தேசியம் பற்றியும் அதன் எதிர்கால நன்மை பற்றியும், அதற்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் குறித்தும் 'நன்றி'யுணர்வுடன் கூடிய 'எஜமான' விசுவாசத்துடன் சிந்தித்துக் கருத்துக் கூறும் ஒரு சிங்களத்தலைவராக தன்னை இனங்காட்டி அதன் மூலம் பேரினவாதிகள் அனைவரதும் பேரன்பிற்குரிய ஒருவராக வளர்ந்து வந்து கொண்டிருக்கும் அரசியல்வாதி யார் என்று எவரும், எவரிடமும் கேட்டால்-
அவர் 'லக்ஷ்மன் கதிர்காமர்' தான் என்று பளிச்செனப்பதில் கூறி விடுவார்கள்.

அந்த அளவுக்கு சிங்களத் தலைமைகளைவிடவும் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தேசிய (சிறிலங்கா) மட்டத்திலும் சர்வதேசிய மட்டத்திலும் இந்தத் தள்ளாத காலத்திலும் ஓடியோடி... மன்னிக்கவும் பறந்து பறந்து மேற்கொள்வதில் சளைக்காதவர் அவர். அண்மையில் இந்தியா சென்ற அந்த சந்திரிகாவின் அபிமான ஆலோசகர், 'இன்றைய சமாதான நடவடிக்கைகள் சிறிலங்காவை இரண்டாகப் பிரிய வழிவகுக்கும் என இந்தியத் தலைவர்களுக்கு அரசியல் ஞானோபதேசம் செய்து அவர்களைக் குழப்பி அவர்கள் மூலம் சமாதான நடவடிக்கைகளைக் குழப்பும் கைங்கரியத்தைக் கச்சிதமாகச் செய்துமுடித்துள்ளார்.

இப்போது சர்ச்சைக்குரியதாகி உள்ள, உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில், அப்பகுதிகளுக்கு உரிமையாளர்களாகிய மக்களை மீளக் குடியேற்றுவதற்கான கோரிக்கைகளின் நியாயத்தன்மையை சர்வதேச சமூகம் உணர ஆரம் பித்து அதற்கான திட்டம் குறித்து ஒரு இணக்கப்பாட்டுக்கு வர முயற்சிகளை மேற்கொண்டு வருகையில் கதிர்காமர் மற்றொரு கல்லைத் தூக்கிப் போட்டுள்ளார்.

'உயர் பாதுகாப்பு வலயத்தினுள் மக்களை மீளக் குடியமர்த்துவது என்ற பெயரில் புலிகள் தமது யுத்தக் குடும்பங்களை குடியமர்த்த முனைகிறார்கள்' என்று அவர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

அதுவும் புதுடில்லியில் வைத்துத்தான் இந்தக்கருத்தைக் கூறியுள்ளார் இது 'நம்பியாரு'க்கு அவர் கூறியுள்ள பகிரங்க ஆலோசனை என்பதில் ஐயமில்லை.

சந்திரிகாவின் 'சமாதானத்திற்கான யுத்தத்தை' தொடர்ந்தும் ராஜதந்திர ரீதியில் சிங்களப் பேரினவாதிகளுக்காக - அவர்களின் அபிலாஷைகளுக் கேற்ற வகையில் - சர்வதேச அளவில் முன்னெடுப்பதில் 'சோம தேரரை' இந்தக் 'கதிர்காமதேரர்' தூக்கிச் சாப்பிட்டு விடுவார் போலுள்ளது. நன்றியுணர்வு - விசுவாசம் தேவைதான். ஆனால் குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் கம்பாக தன்னை இனம் காட்டிக் கொண்டு இப்படியும் செயற்பட வேண்டுமா?

கதிர்காமர் இதனைப் பற்றி சிந்திக்கவே மாட்டார். அவரின் பதவி விசுவாசம் அவரை நியாயபூர்வமாகச் சிந்திக்கவிடாது.

## யதார்த்தத்தை புரிந்துகொண்ட வாசுதேவாவின் கருத்துக்கள்



சனநாயக இடது சாரி முன்னணியின் தலைவரான வாசுதேவ நாணயக்கார லங்கா சமசமாஜக்கட்சியில் தனது அரசியல் கொள்கைகளை இனங்கண்டு கொண்டு, இளவயதில் பாராளுமன்றம் நுழைந்த இடதுசாரி என முத்திரை பதித்தவர்.

ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் கிளர்ச்சியில் கைதாகி சிறைவாசம் அனுபவித்தவர். அவ்வப்போது வெவ்வேறு இடது சாரி அணிகளுள் தன்னை இணைத்துக் கொண்ட இந்தத் தொழிற்சங்கவாதி - அரசியல்வாதி அவ்வப்போது சில நல்ல கருத்துக்களையும் சொல்லிவந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக அண்மையில் உயர்பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் தொடர்பாக சிங்கள நாளிதழ் ஒன்றிற்கு அளித்த செவ்வியொன்றில் 'அதியுயர் பாதுகாப்பு வலயத்தினைக் கைவிட்டால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும், இராணுவச் சமநிலை மாறிவிடும், இராணுவத்தினரின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும் என்று எதிர்க்கட்சிகளும் இராணுவமும் நினைக்கின்றன - பிரசாரம் செய்கின்றன. ஆனால் அப்பிரதேசங்களில் உரிமையாளர்களான இலட்சக்கணக்கிலான பொது மக்களின் வாழ்விடங்களில் அவர்களை வாழவிடுவது கடமையாகும். இவர்கள் காலம் காலமாக எல்லையில்லாத துன்ப துயரங்களை அனுபவித்து வருபவர்கள்' என்று தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை இடது சாரிகளில் பெரும்பாலோர் பேரினவாத சிந்தனைகளுடன் தான் இனப்பிரச்சினையை அனுகிவந்துள்ளனர் என்பது வெளிப்படையானது.

சமசமாஜிகள், கம்யூனிஸ்ட்டுக்கள், ஜே.வி.பியினர் என அனைவரும் இதற்கு விதிவிலக் கல்ல. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் சர்வதேச இனவிடுதலைப் போராட்டங்கள் பற்றியும், ஆதிக்க வெறியர்களுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் எதிராக வாய்கிழியப் பேசும் இவர்களுக்கும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தெம்போ, திராணியோ இருந்தது கிடையாது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை வலியுறுத்தி தென்பகுதி மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொடுக்கும் 'சமதர்ம' ஆத்மா அவர்களுக்கு இருந்ததில்லை. நாவளவில் வரட்டுச் சித்தாந்தங்களை உதிர்த்து தங்களின் சுயவாழ்வியல் இலக்குகளை எட்டுவதிலேயே அவர்கள் குறியாக இருந்து வந்துள்ளனர்.


சிறிமாவோ காலம் முதல் சந்திரிகா காலம்வரை இனப்பிரச்சினையை பூதாகாரமாக வளர்த்ததில், போரைத் தீவிரப் படுத்தியதில் இந்த இடதுசாரிகளின் பங்களிப்பும் பெரியதாகும்.

வாசுதேவ, விக்கிரமபாகு கருணாரத்ன போன்றவர்கள் அவ்வப்போது சில நியாயபூர்வமான கருத்துக்களை முன்வைத்திருந்தாலும் கூட, அவர்களின் கருத்துக்கள் சிங்கள மக்கள் மத்தியில் எந்தளவுக்கு எடுபட்டிருக்கும் என்பது கேள்விக்குறியே...

'இந்த நாட்டில் இரண்டு நிர்வாக அலகுகள் - முறைகள் இருக்கின்றன. முதலில் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனடிப்படையிலேயே தீர்வுக்கு முயல வேண்டும்.' என்று வாசுதேவ அந்தப் பேட்டியில் கூறியிருப்பது அவர் இன்றைய அரசியல் யதார்த்தத்தை உணர்ந்துள்ளமையையே காட்டுகிறது.

ஆனாலும் அவரது குரல் எந்தளவு தாக்கத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்பது கேள்விக்குறியே. சிறிலங்காவின் இடதுசாரிகளின் எதிர்காலம் போல....

## 'மிலிந்தமொறகொட'வின் கட்டாய இராணுவ சேவைத்திட்டம்.



சமாதான முயற்சிகளில் தீவிரமான அக்கறையுடன் செயற்படுபவராக தன்னை இனம் காட்டிவரும் சிறிலங்காப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவின் பொருளாதார ஆலோசகரும், பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சருமான மிலிந்த மொறகொட கட்டாய இராணுவசேவை தொடர்பாக மீண்டும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளார்.

சமாதானம் வந்தால், அரசியல் தீர்வு எட்டப்பட்டு விட்டால் இப்போது சிறிலங்காவின் தேவை அதிகமாக உள்ள, பெருமளவு செலவுக்கும் காரணமாக உள்ள இராணுவத்தினரை எந்தவகையில் பயன்படுத்துவது என்பது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் ஐ.நா. படையில் அவர்களை இணைப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாயும் சிலகாலம் முன்னர் பரவலாகப் பேசப்பட்டு வந்தது தெரிந்தே.

இந்த நிலையில் தான் அரசு அடுத்த மூன்றாண்டுகளுக்கான பாதுகாப்புச் செலவின நிதி ஒதுக்கீடு தொடர்பாக இதே அமைச்சர் மிலிந்த மொறகொட திறைசேரிச் செயலர் கரித்தரத்வத்தை, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரைக் கொண்ட குழுவொன்று ஆய்வு செய்ததும் நினைவிருக்கலாம். இதில் பாதுகாப்பு படைகளுக்கான நவீன ஆயுதத் தளபாடக் கொள்வனவுக்கான நிதி ஒதுக்கீடும் அடங்கும்.

இந்த நடவடிக்கை கூட சந்தேகத்திற்கிடமான ஒன்றாகவே கருதப்பட்டது. சமாதான முயற்சிகளில் நியாயமான - உறுதியான - தமிழ்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய, நேர்மையும், துணிச்சலும் அரசுக்கு இருக்குமானால், திறைசேரி வெறுமையாக உள்ளது என்று கூறிக்கொண்டு அதற்கான காரணமாக பொ.ஐ.முன்னணி அரசைக் குறைகூறி அவர்களின் போர்நடவடிக்கையை குற்றம் சாட்டிக் கொண்டே, அடுத்த மூன்றாண்டு பாதுகாப்புச் செலவின ஒதுக்கீடு பற்றி ஆராய வேண்டிய அவசியமில்லையல்லவா?

இது வழமையான இயல்பான பாதுகாப்பு ஒதுக்கீடு பற்றிய ஆய்வு தான் என்று கூறிச் சமாளித்தாலும் இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு விடயத்தில் பாதுகாப்பு அமைச்சை - அமைச்சரை விடவும் மிலிந்த மொறகொட காட்டும் அக்கறை அதிகமானது தான்.

இராணுவத்தினருக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்பதுடன் - அது ஒரு தோல்விகரமான முயற்சியாகவும் அமைந்துள்ள நிலையில் இராணுவத்திலிருந்து தப்பியோடுவோர் தொகையும் கூடிக்கொண்டே போகிறது.

இதேசமயம் காணாமல்ப் போன படையினர் விடயத்தில் சந்திரிகா அரசு நடந்து கொண்ட விதமும், இறந்த படையினரின் சடலங்களைக் கையேற்க மறுத்து அவர்களுக்கான இறுதி மரியாதையைக் கூட வழங்க மனங்கொள்ளாது புறக்கணித்து அவமதித்த செயல் இப்போது வெளியாக தென்பகுதியில் ஒரு கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ள வேளையில் மொறகொட கட்டாய இராணுவ சேவையை வலியுறுத்த ஆரம்பித்துள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதைவிடவும் 'இந்த எண்ணம் பல ஆண்டுகளுக்கு முன்னர் மனிதவலு ஊக்குவிப்புச் சட்டத்தை கொண்டு வந்த போதே தனக்கு ஏற்பட்டதாகவும் இந்த எண்ணம் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இருப்பதாகவும்' மொறகொட கூறியிருப்பதை அதிக கவனத்தில் கொள்ள வேண்டும்.

**செங்குட்டுவன்**

"த நேஷன்" பத்திரிகைக்கு அளித்த செவ்வியை ஆதாரமாகக்கொண்டு

# "இந்த உலகம் பாதுகாக்கப்பட்டால் எமது வீடும் பாதுகாக்கப்படும்"

## இதுதான் நோர்வீஜியர்களின் நம்பிக்கை என்கிறார் தாய்லாந்துக்கான நோர்வேத் தூதுவர் லண்ட்.



**தாய்லாந்தின்** நாகன்பத்தம் நகரின் றோசாத் தோட்டத்தில் (**ROSE GARDEN**) இம்மாதம் 6ஆம் திகதிமுதல் 9ஆம் திகதிவரை நடைபெற்ற பேச்சுக்களுடன் சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் நான்காம் கட்டத்தையும் கடந்து ஐந்தாம் கட்டத்தை நோக்கி பயணிக்கிறது.நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தப் பேச்சுக்களுக்கு மூன்றாவது தடவையாகவும் ஒரு களத்தை வழங்கியுள்ள தாய்லாந்து தேசம்,அதன்மூலம் இந்தச் சமாதான முயற்சிகளில் தன்னையும் ஒரு பிரதான பங்காளியாக்கிக் கொண்டுள்ளது. தாய்லாந்து தேசத்தின் ஊடகங்களும் கூட இலங்கையின் இந்தச் சமாதான முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளையும், செய்தி ஆய்வுகளையும் வெளியிட்டமையை பேச்சுக்கள் நடைபெற்ற காலங்களில் அங்கிருந்தபோது அவதானிக்கமுடிந்தது. அதிகம் "தாய்" மொழி ஊடகங்களே நிறைந்துள்ள அந்த மண்ணில் தொலைக் காட்சிகளில் இந்தச் செய்திகள் ஒளிப்படங்களுடன் காட்டப்பட்டமையால் அதனை நாமும் ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தது. "தாய்" மொழிப்பரிச்சயம் அறவே இல்லாத நிலையில் வானொலிச் செய்திகள்பற்றி எதையும் ஊகிக்கமுடியாத போதும், பத்திரிகைகளில் இதுதொடர்பில் பலவிடயங்கள் வெளியிடப்பட்டிருந்தமையை அவதானிக்கமுடிந்தது. குறிப்பாக தாய்லாந்தில் கிடைக்கப்பெற்ற ஆங்கிலப் பத்திரிகைகளான, The Nation, Bangkok Post, International Herald Tribune ஆகிய பத்திரிகைகளில் இது தொடர்பில் பல ஆக்கங்கள் வெளியாகியிருந்தன.

பேச்சுக்கள் ஆரம்பித்த தினமான ஜனவரி 6ஆம் திகதி "த நேஷன்" பத்திரிகை தாய்லாந்துக்கான நோர்வேத் தூதுவரிடம் பெறப்பட்ட செவ்வியொன்றை வெளியிட்டிருந்தது. இலங்கைப் பிரச்சினை விவகாரத்தில் நோர்வே இவ்வளவு அக்கறை செலுத்தக் காரணம் என்ன என்பது தொடர்பில் அந்தச் செவ்வியில் தாய்லாந்துக்கான நோர்வேத் தூதுவர் றக்னி பேர்ட்டிலண்ட்(Ragne Birte Lund) தெளிவாக விளக்கியிருந்தார்.உலகின் பல நாடுகளிலும் இத்தகைய சமாதான முயற்சிகளில் ஈடுபட்டதற்கான காரணத்தையும் அவர் த நேஷன் பத்திரிகையாளர் சுபலக் காஞ்சனாக்குண்டி (Supalak Ganjanakhundee)யிடம் விளக்கிக் கூறியிருக்கிறார்.

1901ஆம் ஆண்டுமுதல் தொடர்ச்சியாக ஒவ்வோராண்டும் சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்றுவரும் ஒரே நாடு நோர்வே.இவ்வாறு ஒவ்வோராண்டும் தமது நாடு நோபல் பரிசுக்கு ஏன் தெரிவுசெய்யப்படுகிறது என்பதற்கு தெளிவான ஒருகாரணத்தை சொல்லிவிடுவது இலகுவானதல்ல என்று குறிப்பிடும் பேர்ட்டிலண்ட், "நோர்வே நாடும்,அதன் பாராளுமன்றமும் உலக நாடுகளில் நிலவும் பல்வேறு முரண்பாடுகளை தீர்ப்பதிலும், இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவதிலும் விசேட கவனம் செலுத்திவருகிறது. ஆனாலும் எமக்குப் பரிசு வழங்கப்படுவதற்கான காரணத்தை எம்மால் உறுதியாகக் கூற முடியாது"என்று தெரிவிக்கிறார்.

உலகின் பல்வேறு முரண்பட்ட தரப்புக்களும் சந்தித்து தம்மிடையே ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்திய ஒரு இடம் என்றவகையில் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவுக்கு "சமாதானத்தின் தலைநகரம்"என்கின்றதொரு பெயரும் வழங்கப்படுகிறது.1993ஆம் ஆண்டு பாலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே ஒரு இணக்கப்பாடு ஏற்படுவதற்கும், அதனைத் தொடர்ந்து ஒஸ்லோ ஒப்பந்தம் என்று தெரிவிக்கப்படுகின்ற பிரபல ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கும் பலவழிகளிலும் நோர்வே தேசமே காரணமாக அமைந்துள்ளது.கடந்த தசாப்த காலங்களில் கம்போடியாவிலும், குரூஷியாவிலும்,யூகோஸ்லாவியாவிலும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளில் நோர்வே ஈடுபட்டிருந்தது.

1996இல் இடதுசாரிப் போராளிகளுக்கும் குவாத்தமாலா அரசாங்கத்துக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவே களமமைத்துக் கொடுத்தது.நோர்வேயின் மனிதாபிமானப் பணிகளுக்கான நிறுவனங்களுக்கூடாகவே சோமாலியாவுக்கும்,சூடானுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் கட்டியெழுப்பப்பட்டன. இந்தோனேஷியப் பிரச்சி

**றுசாங்கன்**

னைகளுக்கான தீர்வுக்கும் கடந்த மாதம் நோர்வே நாடே அனுசரணை வழங்கியுள்ளது.


கடந்த வாரம் தாய்லாந்தில் நடைபெற்ற நான்காம்கட்டப் பேச்சுக்களுக்கு அனுசரணை வழங்கவென நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்கெல்கேசன் தாய்லாந்துக்கு வருகைதந்திருந்தமையால் பேர்ட்டிலண்ட் மிகவும் சுறுசுறுப்பாக கடும் வேலையில் ஈடுபட்டிருந்தார்.இந்நிலையிலும் உலக சமாதானத்துக்கான நோர்வேயின் இந்த முயற்சிகள் பற்றி நேஷன் பத்திரிகையாளர் அவரிடம் கேள்விக்கணைகளைத் தொடுத்தார்.

இத்தகைய சமாதான முயற்சிகளில் நோர்வே தொடர்ந்தும் ஈடுவதற்கான காரணம் என்ன என்பது இன்று பரவலாக எழுப்பப்படும் ஒரு கேள்வி. முரண்பாடுகளுக்குள் சிக்கியுள்ள நாடுகள் அமைந்துள்ள பிராந்தியங்களிலிருந்து வெகு தொலைவில் இருக்கின்ற போதிலும்,ஒரு சிறிய இராச்சியமான நோர்வேயினால் எவ்வாறு இவற்றுள் தலையை நுழைக்க முடிகிறது?. எல்லாவற்றுக்கும் மேலாக,இத்தகைய முரண்பாடுகளுள் சிக்குண்டுள்ள நாடுகள்,அவற்றுக்குத் தீர்வுகாண்பதில்

நோர்வேமீது இத்தனை நம்பிக்கை கொள்ளக் காரணம் என்ன?.

பேர்ட்டிலண்டே சொல்கிறார், நோர்வே காலனித்துவச் சிந்தனை இல்லாத ஒரு சிறிய நாடு. பிரச்சினைகளுக்குள்ளாகியுள்ள பிராந்தியங்களில் நோர்வே நாட்டுக்கு எவ்வித பொருளாதார நலன்களோ அல்லது பிராந்திய நலன்களோ கிடையாது. எங்களிடம் எவ்விதமான இரகசியத் திட்டங்களும் இல்லை (We have no hidden agenda) என்று குறிப்பிட்ட லண்ட், இன்னும் சொல்கிறார்.

"மத்தியகிழக்கிலும், குவாத்தமாலாவிலும் எமது பங்களிப்பு நிச்சயமாக எதையோ சாதித்திருக்கிறது.ஆனால் எம்மிடம் ஒரு குறிப்பிட்ட தனி வடிவம் (**model**) எதுவும் கிடையாது.ஒரு நடுநிலையாளராக அல்லது அனுசரணையாளராக நாம் எதனையும் வலியுறுத்துவது கிடையாது. முரண்பாட்டுக்குள் சிக்குண்டுள்ள இருதரப்பையும் தமது பாணியிலேயே இணைந்து முன்னேறுவதற்கு நாம் தூண்டுதலளிக்கிறோம்."என்று தமது சமாதான முயற்சிகளின் இரகசியத்தை விளக்குகிறார் லண்ட்.




உலகநாடுகளிடையே பல்வேறு விதமான உறவுகளையும் வைத்திருந்ததில் நோர்வே நாட்டுக்கு ஒரு நீண்ட பாரம்பரியமே உண்டு.ஐக்கிய நாடுகள் அமைப்பின் முக்கிய பங்காளி நாடாக நோர்வே தன்னால் இயன்றளவுக்குச் செயற்பட்டு வருகிறது. ஐ.நா.அமையத்தின் மனிதாபிமானப் பணிகளுக்கான பிரிவுகளில் நோர்வே பல முக்கிய பதவிகளை வகித்திருக்கிறது. ஐக்கியநாடுகள் அமையத்தின் முதலாவது செயலாளர் நாயகமான ட்ரிக்வி லீ (**Trygvy Lie**) கூட ஒரு நோர்வீஜியரே என்றால் பார்க்க வேண்டியதுதானே.

சரி இந்தச் சமாதான முயற்சிகள் எல்லாவற்றிலும் நோர்வே பின்பற்றும் வழிமுறைதான் என்ன?.லண்ட் சொல்கிறார்,

"அரசாங்கத்துக்கும் குடிமக்களுக்கும் இடையில் தெளிவான உறவுநிலையை வளர்த்தெடுப்பதே "நோர்வீஜிய வழிமுறை" (**Norwegian model**) என்று சொல்லத்தக்க ஒன்றின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்."என்கிறார் அவர்.

உலக நாடுகள் பலவற்றிலும் பல்வேறு மனிதாபிமானப் பணிகளிலும் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கான செயற்பாடுகளிலும் நோர்வீஜிய அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் ஈடுபட்டுவருகின்றன என்பதைக் குறிப்பிட்ட லண்ட்,அவற்றுள் முதன்மையான பணியாக கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளுக்கு எதிரான இயக்கத்தைக் குறிப்பிட்டார். 1997ஆம் ஆண்டு மிதிவெடிகள், கண்ணிவெடிகளைத் தடைசெய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றும் ஒஸ்லோவில் உருவாக்கப்பட்டது.

"இவ்வாண்டில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளுக்கிடையிலான இது தொடர்பான மாநாடு, அரசாங்கங்களுக்கும் குடிமக்களுக்குமிடையிலான உறவைக்கட்டியெழுப்புவதில் மிக முக்கியமான ஒன்றாக அமையும் என்று நான் நம்புகிறேன்" என்று நம்பிக்கையுடன் இதுதொடர்பில் தெரிவிக்கிறார் லண்ட்.

பல்வேறு பிரச்சினைகள் மிகுந்த நாடுகளிலும் தமது அரசசார்பற்ற நிறுவனங்கள் உயரிய மனிதாபிமானப் பணிகளை ஆற்றிவருவதாகக் குறிப்பிடும் லண்ட்,இந்த அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் அமையத்தின் ''பெறுமதிமிக்க'' பங்காளர்களாகவும் இருந்து வருவதாகக் குறிப்பிடுகிறார். இவ்வளவுதூரம் நோர்வீஜியர்களால் பல நாடுகளிலும் பணியாற்ற முடிவதற்கான மற்றுமொரு முக்கியமான பெறுமதி மிக்க இரகசியத்தையும் இந்த செவ்வியின் போது பேர்ட்டிலண்ட் குறிப்பிடத்தவறவில்லை.

"பொதுவாக இராஜதந்திரிகள் தாம்சார்ந்த தேசங்களின் நலன்களை மையப்படுத்தியே செயற்படுவர்.ஆனால் நோர்வீஜிய இராஜதந்திரிகள் மற்றவர்களுக்காக பணியாற்றுமாறும், சமாதானத்தை ஊக்குவிக்குமாறும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்"என்று அந்தச் சிதம்பர இரகசியத்தை வெளியிட்டார் லண்ட்.

இம்மாத இறுதிப்பகுதியளவில், இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட நோர்வீஜிய இராஜதந்திரிகள் சிலர் நோர்வேயின் அனுசரணையுடன் நடை பெறும் மனிதாபிமானப் பணிகளை ஆராய்வதற்காக தாய்லாந்தின் தலை நகரான பாங்கொக்குக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் இவர்கள் இலங்கையில் எவ்வாறு சமாதான முயற்சிகள் செயற்படுகின்றன என்பது தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கைக்கும் வரவுள்ளனர்.

இவையெல்லாம் இருக்கட்டும். உலக நாடுகள் பலவற்றின் நலன்களுக்காகவும் இவ்வளவு பாடுபடுவதாகக் கூறுகிறீர்களே.உங்களுடைய நாட்டில் எல்லாம் சரியாக உள்ளனவா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கும் லண்ட் பதிலளிக்கத் தவறவில்லை."ஆம், நாம் ஏன் எமது நாட்டின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதற்கு அதிக பணத்தைச் செலவிடுவதில்லை என்று எமது நாட்டின் வரிசெலுத்துவோர் சிலர் எம்மிடம் கேட்பதுண்டு.எமது நாட்டின் நலன்களிலும் முன்னேற்றப்பட வேண்டிய பலவிடயங்கள் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.ஆனால் எம்மில் பெரும்பாலானவர்களது நம்பிக்கையும் வேறொன்றாகவே உள்ளது"என்று குறிப்பிட்ட லண்ட் சொன்ன அந்த நம்பிக்கை இதுதான்:

"இந்த உலகத்தை நாம் பாதுகாப்பான ஒன்றாக மாற்றுவோமானால்,அது எமது வீட்டையும் பாதுகாக்கும்"

ஒரு நவீன உலக வரலாற்றுப்பட்டதாரியாகி,நோர்வீஜிய வெளிவிவகார அமைச்சின் மனிதாபிமான மற்றும் மனித உரிமைகளுக்கான பிரிவின் தலைவராகப் பணியாற்றி, ஐக்கிய நாடுகள் அமையத்திலும் பல முக்கிய பதவிகளை வகித்து தற்போது தாய்லாந்தின் தூதுவராகப் பணியாற்றும் பேர்டினண்ட் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானப்பணிகளில் ஈடுபடுவதை தனது பணியாக மட்டும் கொள்ளவில்லை. அதைத்தனது கொள்கையாகவும் கொண்டுள்ளார் என்று குறிப்பிடுகிறார் நேஷன் பத்திரிகை சார்பில் லண்டைச் செவ்விகண்ட காஞ்சனா.

## சொல்லியே தீரவேண்டும்



வன்னியில் தற்போதைய சூழலில் பல அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் அவற்றின் சேவைகள் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளதையும் நாம் காணக் கூடியதாகவுள்ளது.

சுமுகமானதொரு நிலை தற்போது நிலவுகின்ற நிலையில் இன்னும் தங்கள் தங்கள் இடங்களில் மக்கள் மீளக்குடியேறி முடியவில்லை. அதேநேரம் சில இடங்களில் அந்தக் கிராமங்களிற்குரிய பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பன உரிய இடங்களில் இயங்க ஆரம்பித்துவிட்டன.

இதனால் அந்தப் பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்கள் வேறு பாடசாலைகளிற்கு மாறாமல் அதே பாடசாலைக்குச் செல்ல வேண்டியதொரு நிலையில் உள்ளது.

இந்த நிலையில் தமிழீழ போக்குவரவுக்கழகம் மாணவர்கள் பாடசாலைகளிற்குச் செல்வதற்கு இலகுவாக மாணவர்களிற்கென இலவசசேவை ஒன்றினை நடாத்தி வருகின்றமையினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தமிழீழப் போக்குவரவுக்கழகம் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வி சார்ந்த பெரியோர்கள் மத்தியில் பாராட்டப்படுவதினை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

எமது மாணவர்களின் நலன் கருதி போக்குவரவுக்கழகத்தினர் மேற்கொள்ளும் இச்சேவை எமது நாட்டிற்கு தேடித்தரும் ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.

உண்மையில் அவர்களை எல்லோருமே இக் காரியத்திற்காக பாராட்டுதல் வேண்டும்.

**வேழினி**



துயிலுமில்ல வாசலில இறங்குகிறார்கள் ஆண் போராளிகளும், பெண் போராளிகளும்...

**கட்டையாய்,** நெட்டையாய், கண்களில் ஞான ஒளி தெறிக்கும் பார்வைகளும்,..... அவர்கள் கவனத்தில் அந்தத் துயிலுமில்லத் தோழர்களின் நினைவுகளாயிருக்க இறங்குகின்றார்கள். என்னிலும் சிறியவர்கள்.... சிரிப்பும், கலகலப்புமாய் அவர்கள் போகின்றார்கள்.

*ஓ.... இனியவரே....!*
*உங்கள் கால் தொட்டு வணங்க*
*கைகள் எழுகின்றன*

# தாய்மடி வாசம் 9

*எனைப்பார்த்துக் கொண்டு போறீரே...!*
*அதனால் உளத்தால் தொழுகின்றேன்*
*உங்களுடனிருந்து*
*உங்களுக்காய் வாழ*
*இயலாத என் விதியையெண்ணி*
*வருந்துகிறேன்...*

மெலிதாய் பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. அந்தவீட்டின் படலையைத் திறந்து கொண்டு உள்ளே போகிறோம். வாசலில் ஒரு அம்மா.

"உள்ளுக்கை வாங்கோ பிள்ளையள்... மகள் உள்ளைதானிருக்கிறா...வாங்கோ..."

என எங்களை வரவேற்கிறா. அழகான சிறிய வீடு. முன்முற்றத்தில் அம்மாவுக்கு முன் எங்களை வரவேற்ற அந்த வாழைமரம்.

அந்த வாழைக்குடும்பம் என் வீட்டு முற்றத்தை என் நினைவில் நினைவிருத்தியது. முற்றத்து நடுவில் துளசிச் செடி, அழகாய் வரிசையாய் கனகாம்பரமும், சீனியாசியும், செவ்வந்தியும், வாடாமல்லியும், அடர்ந்து வளர்ந்த றோசா மரமும், கிணத்தடிப்பீலிக்குப் பக்கத்தில் சடைத்திருந்த எலுமிச்சை, மாதுளையும், எல்லாருக்கும் உறவான எங்கள் வீட்டு நந்தியா வட்டையும், நித்தியகல்யாணியும்.... இப்போ இருக்குமா....? இல்லையில்லை எதிரியின் பிடியிலல்லவா இருக்கிறது. அந்தச் செடிகளும், கொடிகளும், மரங்களும் இப்போ மண்ணுள் புதைந்திருக்கும். அவை இருந்த இடம் தெரியாமல்

*அவர்கள் பாதைபோட்டுத் திரிவார்கள்...*
*நாமிருந்த இடமும் அழிந்திருக்கும்*
*என் வீட்டு வாழைகளும்*
*இறந்து போய் வருடங்களாயிருக்கும்*

*அம்மம்மாவினது உதிரத்தால்*
*உருவான அந்தக் கல்வீடும்*
*அடையாளம் இழந்திருக்கும்...*

*அம்பி வளவும்*
*அருந்தவம் வளவும்*
*விசுவம்மான் வளவும்*
*ஆட்களின்றி அழுதிருக்கும்...*

*வீட்டுக்கு வடக்காயிருக்கும்*
*வயிரவரும் விளக்கின்றி*
*இருண்டிருப்பார்...*

*வடமேற்காய் குடியிருக்கும்*
*சிவகாமியம்மனும்*
*நாகபூசணியும்*
*பின்வளவுப் பெரும் பனைகளின்*
*துணையோடு துயரில் துடித்திருக்கும்...*

*எங்கள் ஊர் மூத்தவர்கள்*
*உதிரத்தால் உயர்ந்த நிலம்*
*உயிர்கள் ஏதுமின்றி*
*உருவளிந்து போயிருக்கும்...*

*பேய்கள் மட்டுமே*
*அங்கு போயுலாவித் திரியும்...*

வாழைக் கன்றுக்கருகில் மோட்டார் வாகனத்தை நிறுத்திவிட்டு நந்தா இறங்குகிறாள். வாசலில் ஒரு சிறுமி 4 அல்லது 5 வயதிருக்கும். இமை வெட்டாது எம்மையே பார்த்துக் கொண்டு நின்றாள். "வாங்கோ..."

கையில் 7 அல்லது 8 மாதமிருக்கும் ஒரு ஆண்குழந்தையுடன் எங்களை உள்ளேயளைத்தது அந்தக்குரல்... "வாங்கோ இருங்கோ..." உள்ளே போயிருக்கிறோம்.

அந்தச் சின்னப் பெண்ணை அழைக்கிறேன். இஞ்சை வாங்கோ...உங்களுக்கு என்ன பேர்...? எனக்கு கங்கை ஓ...அச்சாப் பேரென்ன ...! ஓ... என சிரிக்கிறாள். நல்ல கொழு கொழு என்றிருந்த கங்கையின் சிரிப்பு எல்லோரையும் சிரிக்க வைக்கிறது. கங்கை போய் விளையாடுங்கோ...அன்ரியவை அம்மாவோடை கதைக்க வந்திருக்கின மெல்லோ... கங்கை தனது விளையாட்டுச் சாமான்களை எடுத்து வந்து எங்களுக்குச் சற்றுத்தள்ளி விளையாடுகிறாள்.

நீங்கள் சொல்லுங்கோ... தொடங்கிறா அம்மா. எங்கிருந்து வந்தேன் என்பதிலிருந்து அந்த அம்மாவுடன் ஆரம்பித்த கதை என் ஊரிலிருந்து வன்னிவரையும் நீண்டது. அடுத்து நாங்கள் தேடித்திரிந்த போராளிக்கவிஞை, படைப்பாளியான அந்த அம்மாவின் போராளி மகளுடன் உரையாடல் தொடங்கியது. புலம் பெயர் இலக்கியத்தில் வந்து நின்றது எங்களது உரையாடல்.

புலம் பெயர் எழுத்தெல்லாம் வெறும் புலம்பலெண்டு கனபேர் சொல்லுகினமே இதைப்பற்றி உங்கடை



கருத்தென்ன...?

நான் புலம்பெயர் எழுத்துக்களை அதிகம் வாசிக்கவில்லை. ஆனால் வாசிச்ச சிலதுகளிருந்து பாக்கேக்கை அது அவேன்ரை வேதனையளை வெளிக்கொண்டாற படைப்பாயிருக்குது. ஆனா புலம்பலெண்டு சொல்லுறவை எப்படி விளங்கி வைச்சிருக்கின மெண்டதைப் பொறுத்துத்தான் அவேன்ரை கருத்தைப் பார்க்கவேணும்."

என ஆரம்பித்த அந்தப் பெண்போராளி எனது அந்தக் கேள்விக்கான பதிலை நீண்டதொரு விளக்கத்தோடு தந்த விதம் எனக்கு சரியான பதிலைத்தந்தது. அப்படியே ஆரம்பித்து பொழுதுபோக்கு எழுத்து, பெண்ணியம், சமூகம் எனப்பலவகை எழுத்தினூடு சென்று கிட்டத்தட்ட 2 மணித்தியாலங்கள் தாண்டிவிட்டன. அப்போது எனக்குப் பிடித்த கவிதைகள், அதனை எழுதிய கவிஞர்கள் பற்றிய கதை ஆரம்பிக்கிறது.

அப்போதுதான் என்னைக் கவர்ந்த போராளிக்கவி அம்புலிபற்றிக் கேட்கிறேன் அந்தப்போராளியிடம். "அந்த அம்புலி நான் தான்" சிரித்தபடி அந்தப்போராளி சொன்னது ஒரு கணம் கனவா என என்னையே நம்பமுடியாமல் தவித்தது மனசு.

"அம்புலி நீங்களா....? ஓ... நான் தேடித்திரிஞ்ச அம்புலி நீங்களா...? உங்கடை கவிதையள் நிறைய வாசிச்சிருக்கிறன். நீவரும் வேளைவரை, என்மௌன ஓலம் உன் செவிகளுக்குக் கேக்கிறதா...! என்துடிப்போடு எனதுலகம் அசைவுறட்டும், உலகமே எங்கள் ஊருக்குவா, தாகம் அடங்கும் வரை வேங்கை களமாடும இப்படி நிறைய உங்கடை கவிதையள் வாசிச்சிருக்கிறன். உங்கடை ஒவ்வொரு கவிதையிலையும் ஒவ்வொரு பதிவு இருக்கு. மனசை அப்படியே அள்ளிக்கொண்டு போயிவிடும்."

என் உள்ளிருந்த முகம் தெரியா அம்புலிக்கவி இப்போ என்முன்னிருக்க என்னுள் பதிவான அம்புலியின் கவிதைகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டேன்.

யாராந்த அம்புலி....! நீண்ட நாளாய் நான்தேடிய போராளிக்கவி அம்புலி...யாரது....? உங்களுக்குத் தெரியுமா...? உங்களுக்குத் தெரியுமா எத்தனைபேரைக் கேட்டிருப்பேன். இந்த முல்லை மண்ணில் கூட எத்தனைபேரைக் கேட்டேன் அவராயிருக்கலாம் இவராயிருக்கலாம் ஊகங்கள் தான் எனக்கு விடையாய் கிடைத்தன. இப்போ நான் தேடிய அம்புலியை நானே கண்டுவிட்டேன்... மகிழ்வில் மனது துள்ளிக் குதித்தது.

வானிலிருக்கும் அம்புலிக்கல்ல இது வன்னியிலிருக்கும் அம்புலிக்கு...! என நான் எழுதிய கவிக்கடிதம் என் நினைவுப்பதிவிலிருந்து எழுகிறது.

*அன்புள்ள அம்புலிக்கு!*
*நலம் நலம் வேண்டுகிறேன்.*
*யாரந்த அம்புலி...?*
*உனைத்தேடும் என் விழிகள்*
*உன் கவிகளுக்குள் நின்று*

*கண்ணீர் வடிக்கிறது.*

*போராளிக்கவி அம்புலியென*
*உன் பெயர் வருகிறது*

*யார் நீ...?*
*எந்தக் களத்தில் நிற்கிறாய்...?*

*அன்புள்ள அம்புலி*
*இந்தக் கடிதம் உனைச்சேர*
*எப்படி அனுப்புவது...?*
*எந்த வழி உனைவந்தடைய*
*இருக்குமோ நானறியேன்.*

*களம் நிற்கும் கவிப்புயலே*
*உன் காலம் நீள நீ கனபணிகள்*
*செய்து மண்ணில்*
*காவியமாக வேண்டுகிறேன்.*

*உன்னைச் சந்திக்கும்*
*நாளெனக்கும் கிடைக்காது*
*ஆம்...எனக்கது கிடைக்காது*
*என்றாலும் உன் கவிகள்*
*என்னுள் என்றும் வாழும்*

*உன் கவிகள் எடுத்து வரும் எரிமலையை*
*என் சந்ததிக்கு எடுத்துச்சொல்வேன்.*

என் நாளேட்டில் பதிந்திருக்கும் அந்தக்கடிதம் சேரவழியில்லாமல் இருந்த வேளை அம்புலியையே நேரில் பார்த்த மகிழ்ச்சி கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென்பார்களே அதைவிட மேலான மகிழ்வில் துள்ளிக்குதித்தது மனசு.

அந்த நேரத்தில் நானடைந்த ஆனந்தம் இந்தச்சில வரிகளுக்குள் உரைத்துவிட முடியாது. ஆம் எத்தனை

**சுதந்திரா**

நாள் தேடிய அம்புலி என்முன்னிருக்க தரையில் நான் நிற்பதா...? இல்லையே வானிலல்லவா ஏறியிருக்க வேண்டும்.

"என்னட்டைக் கேட்டிருந்தா நான் சொல்லியிருப்பேனே...!"

சொன்னாள் நந்தா. ஓ...கையில் வெண்ணையிருக்கத் தேடிய கதையாய்த்தானிருந்தது என் தேடல்.

போராளிப் பெண்களுக்கு குடும்பம் சரிவராது என்பார்கள் புலத்தில் சிலர், இன்னும் சிலர் போராளியாய் இருந்துவிட்டு எப்படித் திருமணம் முடிக்கலாம் அது நல்ல குடும்பத்தில் பிரச்சினைகளையல்லவா உருவாக்கும் என்பர் சிலர், இதைவிட தமிழீழப் போராளிப்பெண்களெல்லாம் குறுகிய வட்டத்துள்தான் நிற்கிறார்கள் என்ற பல புலத்துப் புத்திஜீவிகளின் புலம்பல்கள் இத்தனையையும் உடைத்தெறிந்து போராளியாய், போராளிக்கணவனின் மனைவியாய், கடமைமிக்க தாயாய், தாயகத்தின் தேவைகருதி களம் செல்லும் போர்வீராங்கனையாய், நல்லதொரு போராளிக்கவிஞையாய், பெண்ணியம் என்பதன் பொருள் ஆளப்புரிந்த பெண்ணாய்... எத்தனையாய் தன்னை வரித்து இந்த மண்ணின் மகளாய் பிறந்த இந்தப் பெண்ணை எந்தப்புத்திஜீவியால் புரியமுடியும்...? எந்த எழுத்தாணியால் எழுதமுடியும்...?

இந்த மண்ணில் பெண்ணின் உயர்வுக்கும், ஆழுமைக்கும் இந்தப் பெண்போராளி ஒரு உதாரணமே... ஆனால் ஆயிரமாயிரமாய் இந்தப் போராளியின் வழியெழுந்து வரலாறு படைக்கும் பெண்ணுக்குள்ளிருக்கும் பெண்களை இந்த தேசம் சுமந்து நிற்பதை அங்கு புலம் இலக்கியம் படைக்கும் சில புலம்பல் பேனாக்களுக்கும், அடங்கியே வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்து மனிதருக்கும் புரியவே புரியாது...

அது நாம் விடைபெறும் நேரம். அம்புலியை வணங்கலாம் போலெழுந்த கைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு வெளியில் வருகிறேன். அம்புலியின் மகள் கங்கை ஒரு தலைவாழையிலையை எனக்குத் தந்தாள்.

"இதையென்னம்மா செய்யிறது?"

கேட்ட எனக்கு

"இதிலை நீங்க சாப்பிடுறது"

என்றாள் தன் மழலை மொழியால்...


"இந்த இலை சின்னனா இருக்கு அன்ரிக்குக் காணாது சாப்பிட..."

என்ற எனக்கு இன்னுமொரு இலையைத் தந்தாள் கங்கை. அந்தப்பிஞ்சுக்கைகள் எனக்காய்த் தந்த வாழையிலையை என் கைப்பையில் வைத்துக் கொண்டு அம்மாவிடமும், அம்புலியிடமும், அம்புலியின் போராளிக்கணவரிடமும், கங்கையிடமிருந்தும் விடை பெற்றுக் கொண்டு புறப்படுகிறோம்...

தொடரும்....



# சிறுகதைகள்




தமிழ்நிலா

**சிறையில்** வாடும் என் பாச மலருக்கு, உன் உடலின் மறுபாதி எழுதும் 'அன்புமடல்' இல்லை இல்லை பிரிவுத்துயரால் நொருங்கிப் போன உள்ளத்தின் குமுறல்.

'நாம் நலம்' என்று சம்பிரதாயத்துக்காய் பொய்யாக எழுத விரும்பவில்லை . நீ நலமா? என்று கேட்கவும் விரும்பவில்லை. ஏனென்றால் நீ நலமாக இருக்க மாட்டாய். என்பதை அறிந்தவன் நான் நீ தாய் வீட்டுக்குப் போகவில்லையே. சூரிய ஒளியைக் காணமுடியாத கொடுஞ் சிறைக்கல்லவா போயிருக்கிறாய். தாங்கொணாத உடல் வருத்தத்தாலும், மனவருத்தத்தாலும் துவண்டு போயியுள்ள உனக்கு இம்மடல் மகிழ்ச்சியைக் கொடுக்கப்போவதில்லை. ஆனாலும் எழுதுகிறேன்.

அன்று......அந்தக் கொடிய நாளான அன்று......மாலை வேலை முடித்து சோர்வோடு வந்த போது வாயிலில் நின்று புன்னகையோடு வரவேற்கும் உன்னைக் காணவில்லை. உன் உடலுக்கு ஏதாவது வருத்தமோ என்று பதைபதைத்த நான் (உனக்குத் தலையிடி வந்தால் கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியாதே.உனக்கு வருத்தமென்றால் எங்கள் வீடே கலகலப்பற்று இருக்கும்) வீடெங்கும் தேடினேன். உன்னைக் காணவில்லை. பின் வளவுக்குள் பார்த்தேன் அங்கும் நீ இல்லை. மேச்சலுக்குக் கட்டிய வெள்ளைப் பசுவை அவிழ்த்துக் கொண்டுவரப் போய் விட்டாயோ? 'அம்பா' என்னைக் கண்டதும் பசு கொட்டிலுக்குள் நின்று சோகமாய்க் கத்தியது அருகே சென்று பார்த்தேன். அதன் இரு விழிகளும் நீர் வழிந்தது. எனக்குத் திக்கென்று இருந்தது. ஏதோ செய்தியை உணர்த்தப் பசு முயற்சித்தது போல எனக்குத் தோன்றியது. எங்கே போயிருப்பாய்? அயல் வீடுகளுக்குப் போய் ஊர்வம்பு பேசும் பெண்ணல்லவே நீ. பலத்த யோசனையோடு வீட்டு வாயிலுக்குப் போனேன்.

சற்று நேரம் பொறுத்துக்கொள். உன் செல்ல மகன் "அம்மா... அம்மா..." என்று பிதற்றுகிறான். அவனுக்கு சுகமில்லை. அவனைச் சமாதானப்படுத்திவிட்டு வருகிறேன்.

கவலை நிரம்பிய முகத்தோடு பக்கத்து வீட்டு பார்வதி மாமி வந்தார். அவர் இடுப்பில் இருந்த எங்கள் கீதனின் முகம் வீங்கியிருந்தது. கண்கள் சிவந்திருந்தன. நீண்ட நேரம் அவன் அழுதிருக்க வேண்டும். என்னைக் கண்டதும் விக்கலெடுத்து அழத்தொடங்கி விட்டான். ஓடிச் சென்று அணைத்துக் கொண்டேன். "விமலா எங்கே?" பார்வதி மாமியைக் கேட்டேன். "அவளை.... அவளை...." பார்வதி மாமியும் அழத்தொடங்கி விட்டா. கீதனுக்கு கண்டோஸ் வாங்க கடைக்குப் போனாய். போகும் வழியில் நாயுண்ணிப் பற்றைக்குள் அவர்கள் நின்றார்கள். தண்ணீர்த் தாகத்தாலும், பசிக்களையாலும் அவர்கள் முகம்கள் வாடிவதங்கியிருந்தன. நித்திரை செய்யாத கண்கள் சிவந்திருந்தன. வாரப்படாத தலைகள் கலைந்து கிடந்தன. சோர்ந்து போய் நின்றார்கள். அவர்களைக் கடந்து உன் வழியே போக உன் தாய் உள்ளம் மறுத்தது. அவர்கள் சோர்வைப் போக்க துடித்தது. அவ்விடத்திலேயே தயங்கித் தயங்கி நின்றாய்.

"தம்பி விடிய ஏதாவது சாப்பிட்டு, குடிச்சனீங்களோ...?"

"ஓம் அக்கா..."புன்னகைக்க முயன்றான் ஒருவன்.

"பொய் சொல்லாதையுங்கோ... கொஞ்ச நேரம் பொறுங்கோ வாறன்" வந்த வழியே திரும்பிச் சென்றாய்.

நீ செய்த குற்றம் இதுதான். இன்னொரு தாயான வெள்ளைப்பசுவின் பாலைச்காச்சி அவர்களுக்குக் கொடுத்தாய். அந்த முகங்களின் மகிழ்ச்சியில் பூரித்தாய். ஒரு தாய் தன் மைந்தர்களுக்கு உணவு ஊட்டுவதை 'பயங்கரவாதத் தடைச் சட்டம்' போட்டுத் தடுப்பவர்களின் ஆட்சியில் நீ இருப்பதை மறந்து விட்டாய்.

யாரோ ஒரு கயவன் காசுக்காய் கோடாரிக்காம்பாய் மாறிவிட்டான். பெரிய ஜீப்பில் வந்தார்களாம். உன்னிடம் ஏதோ கேட்டு உறுமினார்களாம். துப்பாக்கியால் முட்டித் தள்ளினார்களாம். வெலவெலத்துப் போய் நின்ற உன்னை இழுத்துச் சென்றார்களாம்.

திரௌபதியின் கூந்தலை பிடித்து அரசவைக்கு இழுத்துச் சென்ற புராண துச்சாதனனை இக்கலி கால துச்சாதனர்கள் வென்று விட்டார்கள். அழஅழ உன்னை அவர்கள் இழுத்துச் சென்றதை பார்த்துக் கொண்டு நின்ற உன் மகனுக்கு காய்ச்சல் நெருப்பாய்ச் சுட்டது.

விமலா, உன்னால் எப்படியம்மா தாங்கிக்கொள்ள முடிந்தது? ரீவியில் மகாபாரதம் ஓடிக்கொண்டு இருந்த போது , பாஞ்சாலியை, துச்சாதனன் அரசவைக்கு இழுத்துச் சென்ற காட்சியைப் பார்த்து விம்மி விம்மி அழுதாயே . அதே நிலை உனக்கு. எவ்வாறு தாங்கிக் கொண்டாய்? பாண்டவர்கள் பாஞ்சாலிக்கு இந்நிலை ஏற்பட்டபோது, எதுவுமே செய்ய முடியாமல் தவித்தது போல நானும் கையாலாகாத நிலையில் இருக்கின்றேனே.

விமலா, ஈராறு மாதங்கள் உன்னைக் காணாமல் தவிக்கிறேன். அப்போது... நீயும், நானும் காதலித்தபோது பெற்றோர்களின் பெரும் காவலுக்கு மத்தியில் கூட ஒரு நாள் தன்னும் உன்னைச் சந்திக்காமல் இருந்ததில்லை. ஆனால் இப் போது...? நான் பெரியவன் யதார்த்தத்தை உணர்ந்து என்னைத் தேற்றிக்கொள்வேன். ஆனால், உன் சின்னஞ்சிறு மகன் எப்படித் தாங்கி கொள்வான்? கனவிலும், நினைவிலும் அம்மா...அம்மா...என்று அழுகின்றான். என்ன செய்தாலும் ஒரு தாயாக மாறஎன்னால் முடியுமா? அவன் துயரைத் துடைக்க என்னால் முடியவில்லை. "அம்மா எப்ப வருவா... எப்ப வருவா.." என்ற அந்தப்பிஞ்சு மனதின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிக்கிறேன்... "அம்மா வெளி நாட்டுக்குப் போய்விட்டாள் மிக விரைவில் வருவாள்" என்று நான் பொய் சொன்னாலும் அவன் நம்ப மாட்டான். ஏனென்றால், அவன் எல்லாவற்றையும் நேரில் பார்த்தவன்தானே.

தங்கள் விருப்பமின்றி திருமணம் செய்துவிட்டோம் என்று கோபித்துக்கொண்டிருந்த உனது, எனது பெற்றோர்கள் இணைந்து விட்டார்கள். இதனை மகிழ்ச்சியாகக் கொண்டாட நீதான் இல்லை. உனது பிரிவுதானே அவர்களை இணைய வைத்தது.

விமலா இந்த விசயத்தைச் சொல்ல என் மனம் இடங்கொடுக்கவில்லை. ஆனாலும், கூறத்தான் வேண்டும். எங்கள் மகனுக்கு இருதய நோயாம். அவன் நீண்ட காலம் வாழ மாட்டானாம் அழாதே விமலா. உன் அழுகை என் நெஞ்சைத் துளைக்கிறது.

கீதன் உன்னைக் காணத் துடிக்கிறான். தாய் அன்புக்காக ஏங்குகிறான். நானும், அவனும் உறக்கமின்றி பல நாளாய்த் தவிக்கிறோம்.

"வைத்தியப் படிப்பு படிப்பவர்கள் பலர் நாட்டை மறந்து, அதிக பணம் உழைப்பதற்காய் வெளிநாட்டுக்குச் செல்கின்றனர். என் மகனை வைத்தியனாக்கி நாட்டுக்குச் சேவையாற்ற வைப்பேன் என்றாய். அவன் ஆனா, ஆவன்னா கூடப்படிக்காமல் இருக்கிறான். சில காலம் மட்டும் எம்முடன் வாழப்போகும் என் செல்வ மகன் உன் முகம் காணத்துடிக்கின்றான். உன்னை விடுவிக்க நான் எவ்வளவு முயற்சிகள் மேற்கொண்டும் முடியாமல் போய்விட்டது.

"தமிழ்அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்கக் கோரி சாகும் வரை உண்ணாவிரதம்" என்ற செய்தியை அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கும் போதும் துடிப்பேன். "உம்மை விடுதலை செய்விக்க முயற்சிப்போம்" என்று தமிழ்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்குறுதி அளித்ததாகவும் நீங்கள் உண்ணா விரதத்தை கைவிட்டதாகவும்" செய்தி வெளியாகும் போது சற்று நிம்மதி அடைவேன். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள், நீ விரைவில் வருவாய் எங்கள் கீதனின் ஏக்கத்தைத் தீர்க்கலாம் என்று ஆவலுடன் எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்ததுதான் மிச்சம். நீ எந்தச் சிறையில் இருக்கின்றாய் என்று கூட எனக்குத் தெரியவில்லை. மகன் அழுகிறான். கொஞ்சம் பொறு...

விமலா... எனக்கு பயமா இருக்கு, கீதன் மூச்செடுக்க கஷ்டப்படுகிறான். ஐயோ...நான் என்ன செய்வேன். வைத்தியர் சொன்ன அந்த... அந்த நாள் இன்று, தானோ? ஏதோ கூற முயற்சிக்கிறான். அவனால் முடியவில்லையே "அம்மாவைப் பார்க்கப் போறன் கூட்டி வந்து காட்ட மாட்டிங்களா அப்பா?" அவன் விழிகள் கெஞ்சுகின்றன. கடவுளே என் நெஞ்சம் வெடித்துவிடும் போல இருக்கிறதே? ஐயோ விமலா இந்த நேரம் நீ இல்லையே. உனக்காக அவன் விழி கள் ஏங்குகின்றனவே. அவர்கள் ஒரு தடவை ஒரேஒரு தடவை உன் முகத்தை நம் செல்வத்துக்குக் காட்ட மறுத்து விட்டார்களே. உன்னைப் பார்க்காமலே அவன் போகப் போறானே? கீதன் என்னை ஏக்கத்துடன் பார்க் கிறான்.என்னால்தாங்கிக் கொள்ள முடியவில்லை. கடவுளே இந்த நிலை என் எதிரிக்கும் கூட வரக்கூடாது, கடவுளே.... விமலா... நம் செல்வத்தின் தலை தொய்ந்து போகின்றதே....அவன் கண்கள்....

◆◆

இவ்வாரம்
இரட்டைச்சிறுகதைகள்




சிவேந்திரன்

"**அம்மா**, எத்தனை நாளைக்கு உப்படி இருக்கப்போறாள்?, பருவத்தை பயிர் செய்ய வேணும் எண்டு சொல்லுங்கோ, இப்ப விளங்காது, வயசு போனபிறகு தனிமை எவ்வளவு கொடுமையானது எண்டு விளங்கும்."

"அம்மா, அண்ணையை பேசாமல் இருக்கச்சொல்லுங்கோ, பெரிய தத்துவஞானிபோல கதைச்சுக்கொண்டு இருக்கிறார்."

"அவன் சொல்லுறதில் என்னபிழையிருக்கு, ஏன் நிர்மலா இப்போதைக்கு கலியாணம் செய்ய மாட்டன் எண்டு சொல்லுறாய், உனக்கும் 30 வயதென்றதை மறந்துபோட்டியோ?"

"அம்மா உவளுக்கு தான் அன்னைதிரேசா எண்டு நினைப்புப்போல என நிர்மலன் கூறியதும் கண்கள் பனிக்க நிர்மலா அறைக்குள் ஓடினாள்.

அவள் ஏ.எல் லஞ் போட்டோக்களை பார்த்தாள் அதில் அவளது பாசத்துக்குரியவனின் படமும் இருந்தது. இவளுக்கு அருகில் இவளுக்கு கொம்பு வைத்தபடி அவன் நிர்மலமாய் நண்பர் குழாத்துடன் சிரித்துக் கொண்டிருக்கும் அந்தப்படத்தைப் பார்த்துக் கொண்டு கல்லூரி வாழ்க்கை நோக்கி சிறகடித்தாள்.

நிர்மலா, வகுப்பில் எப்போதும் முதல் நிலையிலேயே இருந்தாள். புதிதாக வந்த கபிலன் அவளது நிலையைத் தட்டிக் கொண்டான். அவள் உடைந்து போனாள். மாணவர்களின் கேலிக்கு உள்ளானாள். கபிலனை கண்டாலே அவளுக்குப் பிடிக்காது போனது. இதை அறியாத அவன் அவளுடன் இயல்பாகவே பழகினான். அவனது கண்கள் நட்பை ஆர்ப்பரிக்கும்.

நாடகப் போட்டியொன்றில் இவர்களது பாடசாலை கோட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றது. அந்த நாடகத்தில் அப்பாவாக கபிலனும் அம்மாவாக நிர்மலாவும் நடித்தார்கள். இவர்களது நடிப்புத் திறமையே நாடகத்திற்கு உயிர் கொடுத்தது. மாவட்ட மட்டம், தேசிய மட்டம் என இவர்களது நாடகம் சென்றது. இவர்களது பாடசாலையே முதலிடத்தைப் பெற்றது. நடிப்புத் திறனுக்காக இருவருமே பரிசில்களைப் பெற்றார்கள். இதன் பின்பே நிர்மலா கபிலனுடன் நட்பாகப் பழகத் தொடங்கினாள்.

கபிலன் கண்ணியமான மாணவன், கலைகளில் வல்லவனாகத் திகழ்ந்தான், விளையாட்டுக்களில் சிறந்து விளங்கினான், கவிதையில் அவன் கலங்கரை விளக்காக ஒளிர்ந்தான், கலகலப்பான அவனது சுபாவமும் கவர்ச்சியான கண்ணும் அனை வரையும் கவர்ந்திழுக்கும். கபிலன் கல்லூரி வாழ்க்கையோடு மட்டும் நின்று விடவில்லை. காலத்தின் தேவையிலும் கலந்திருந்தான். அவன் அறிவுக் கடலில் கலந்து விடுதலை அமைப்பில் இணைவதற்கு தயாராகிக் கொண்டிருந்தான். அவன் தேசத்தின் தேவையை உணர்ந்தவனாய் இலைமறை காயாக இருந்து மாணவப் பருவத்தே மகத்தான சில பணிகளையும் கச்சிதமாக நிறைவேற்றிக் கொண்டிருந்தான்.

கல்வி வாழ்க்கை கமலமானது, கனிவானது. அந்த நாட்கள் கடப்பதற்கு கபிலனுக்கு கன நாட்கள் இருக்கவில்லை பரீட்சை நிறை வடைந்தது. அன்றைய இறுதி நாளில் கல்லூரி மைதானத்தில் கல் லெறிகள் பல வாங்கியும் களைத்துவிடாத மாமரத்து நிழலில் அந்த மாணவக் குயில்கள் மகிழ்ந்து குலாவின. தமது எதிர்கால எண்ணங்கள் பற்றி எடுத்தியம் பினார்கள். "பாடித் திரிந்த பறவைகளே பழகிக் கழித்த தோழர்களே" என்ற பழைய சினிமாப் பாடலை சிந்துயன் பாடிமுடித்தான். அப்போ அனைவரது கண்களிலும் நீர் முட்ட உதட்டில் செயற்கைப் புன்ன கையைத் தாங்கி நின்றனர்.

அனைவரும் விடை பெற்ற போது நிர்மலா நிசப்தமாய் தன் இருக்கையில் இருந்ததைக் கண்ணுற்ற கபிலன் "நீர் வீட்ட போகேல்லையோ" அவள் அடக்கி வைத்த அழுகை ஆறாய்ப் பாய்ந்தது.

கபிலன் கலங்கிப்போனான். "என்ன நீர் அழுகிறீர்?" "கபில், எனக்குப் பயமாக இருக்கு" "உமக்குத்தான் வெஸ்ற் ரிசல்ற் வரும் கவலைப்படாதையும்" "கபில், நான் ரெஸ்ரைப் பற்றி கவலைப்படேல்ல" "அப்ப ஏன் அழுகிறீர்?" "கபில், நான் உங்களை மனப்பூர்வமாக விரும்புறன்" கபிலன் அழுத்தமாய்ப் பார்த்தான். "என்ன நிர்மலா, நான் எல்லாரையும் போலவே உம்மோடையும் நல்ல பிறண்டாய் இருக்கிறன்." இல்லைக் கபில், எனக்கு இப்படி ஒரு எண்ணம் எப்பதான் வந்ததோ தெரியாது, பல தடவை என்னை சுய பரிசீலனை செய்து பாத்திட்டன், என்னால உங்கட நினைவில இருந்து மீள முடியாமல் இருக்கு" "நிர்மலா, உந்த எண்ணத்தை இந்தக் கணத்திலேயே விடும், நான் ஒரு புனிதப் பாதையை தெரிவு செய்திட்டன், என்ர பாதேல குறுக்கிடாதையும், நான் உமக்கு ஒரு நல்ல நண்பனே ஒழிய வேறு எந்த உறவுமில்லை, என்ர முடிவில ஒரு மாற்றமும் இருக்காது, தயவுசெய்து உம் முடிவை மாற்றும்." என உறுதியாய் உரைத்துவிட்டு அவன் தேசவிடியலுக்காய் ஆகுதியாகி வருபவர்களின் பாசறை நோக்கி உறுதியுடன் பயணம் தொடர்ந்தான்.

பயிற்சி முடிந்து பம்பல் அடிக்கும் நேரங்களில் சக நண்பர்களால் "மச்சான், உனக்கு ஆள் இல்லையோ" என கேட்கும் போது மட்டும் நிர்மலாவின் நினைவு வரும். "இல்ல மச்சான் உதெல்லாம் பெரும் கரச்சல், நான் சின்னப்பிள்ளை, வயது போனதுகளுக்குத்தான் துணை தேவை." என பம்பலாகக் கூறுவான். அப்போது அனைவரும் சிரிப்பார்கள்.

கன காலத்தின் பின் பாதையோரத்தில் ஒருநாள் பள்ளித் தோழனைக் கண்டு கதைத்தபோது "எங்கட பிறன்சில நிர்மலா மட்டும் தான் கல்யாணம் செய்யாமல் இருக்கிறாள், மற்ற எல்லாரும் செய்திட்டாங்கள், அவள் இப்ப செய்ய மாட்டன் எண்டு நிற்கிறாளாம், நல்ல வசதியான குடும்பம், தமையன் செய்திட்டான்" "ஏன்ரா மச்சான் நிர்மலா செய்யாமல் இருக்கிறாள்?" "தெரியாதடா, அப்ப நான் போட்டுவாறன்."

கபிலனுக்கு நிர்மலாவை நினைக்க கோபமாக இருந்தது. அதே சமயம் பாவமாகவும் இருந்தது. ஒரு நாள் நிர்மலா வீட்டுக்குப் போனான். அவள் கபிலனை நினைத்து வடித்திருந்த கவிதைகள் கொப்பி மேசையில் இருந்தது. அவள் வரும்வரை அதை வாசித்தவன் வேதனைப்பட்டான். ஆனால், தன்ர முடிவில உறுதியாய் இருந்தான். அவளும் தன்ர முடிவில உறுதியாய் இருந்தாள். அவனுக்காக காத்திருப்பதாகக் கூறினாள். "நிர்மலா தயவுசெய்து இந்த எண்ணத்தை விட்டிடு, என்ர இலட்சியத்தைப் பாழாக்காதே, உன்னை மன்றாட்டமாக கேட்கிறன். கபில் இதில என்ன பாழாக்கல் இருக்கு? "இல்ல நீ என்ர இலக்கிற்கு இது சாத்தி யப்படாது." நீ வாழ்க்கையைத் தொலைக்காதே, என்ர நினைவு களை நீக்கிவிடு, நீ வாழவேணும் என்னை நீ நேசித்தது உண்மை யெண்டால் வாழ்ந்து காட்டு." அவன் தெளிவாய் எடுத்துரைத்தான். அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

விடைபெற்றுச் சென்ற கபிலன் இரகசியம் என்ற போர்வைக்குள் தன்னைப் புகுத்தி இனத்தின் விடுதலைக்காய் தடைக்கல்லாய் இருந்த இலக்கை வெற்றிகரமாக அழித்துக்கொண்டான். அவனது ஆன்மா அழகு பெற்றது. அவனால் அவன் தேசம் அழகுபெற்றது, அவன் தலைமை அவனது அர்ப்பணிப்புக்கு ஒருகணம் தலைசாய்த்திருக்கும். அவன் ஆகுதியான செய்தியை வேறுயாரும் அறிந்திருக்க நியாயம் இல்லை.

ஆனால், அவள் மட்டும் அவன் வருவான் என்று இலவுகாத்த கிளியாக.... அவனது தடம் தெரியாது அவன் வழிமேல் விழிவைத்து காத்திருக்கிறாள்.

கோபம் கொள்ளும் மனிதன் பாவம். அவன் தனக்கே இட்டுக் கொள்கின்றான் சாபம். - யாரோ



# இயக்கச்சி -2000

எதிரிகள் ஓடிவிட்டார்கள்

குருதி மணக்கிறது
அலட்சியம் செய்யப்பட்ட மனிதரின்
வாழ்வளிக்கப்பட்ட நிலத்திலிருந்து
சாம்பல் பறக்கிறது

இந்த நிலத்துக்குப்
பரிசளிக்கப்பட்டிருக்கிறதா
மயானம்?

இன்னும் புகையடங்கவில்லை
இன்னும் பீரங்கிகளும்
அமைதியாகவில்லை.

போர்க்களமாக்கப்பட்ட ஊர்களிலிருந்து
சனங்களும் அகதியாகி
யோடிவிட்டார்கள்.

கடவுளே
மரணவெளியாய் விரிந்திருக்கும்
இந்த முற்றத்தில்
சூரியனுறங்கப் பனைகளில்லை
நிலவிருக்கத் தென்னந் தோப்பு
களுமில்லை.

நூற்றாண்டுகள் கணந்தோறும்
நம் முன்னோர் வாழ்வின் விதையூன்றி
உதிரமிறைத்துக் கனவுகளைப் பயிராக்கிய
ஊர் முகங்கள்
முட்டாள்தனம் விளைந்த
SLA யின் பத்தாண்டில் (1990 - 2000)
நெருப்புக்கும் அழிவுக்கும்
கொடுக்கப்பட்டன.

குளிரோடைகள் அனல் முகமாயின
எங்கும்
சாவின் வெக்கையடிக்கிறது.

நிழலின் சுவட்டையும்
நெருப்புத்தின்று விட்டது
நினைவுகொள்ள ஏதுமில்லை.

தாங்குவதற்கு ஏதுமின்றிய வானம்
வீழ்ந்து கிடக்கிறது
அநாதரவாய; காயங்களுடைய
நமது முகமுந்தான்

விரிந்த வெளியில்
சிறுபாதை தானுமில்லை
எங்கும் மிதிவெடிகள்;
நிகழ் காலத்தின் உயிருக்கும்
எதிர்காலத்தின் கனவுக்கும் விரிக்கப்பட்ட
மரணத்தின் பொறிகள்.

இதயமில்லாத ஒரு காலத்தின் முட்களில்
வசமாகச் சிக்கியிருக்கிறது
நம் வாழ்க்கை என்ற போதும்
நிலம் மீண்டு இருக்கிறது
ஒரு குளிர்காற்றுப் போல.

## இயக்கச்சி 2002

**1**

சிதைந்த காவலரண்களும் அழிந்து விட்டன
எஞ்சிய முட்கம்பிகளைத் துருத்தின்கிறது
அழிவின் எலும்புக் கூடுகளைக்
காலமழிக்கிறது
எல்லாவற்றையும் கருக்கிய தீயும்
கலைந்து விட்டது.

சாம்பல் மேடுகளில்
புற்கள் முளைத்திருக்கின்றன.

கருகிய மணற் பருக்கைகளில்
நம் மூதாதையரின் கண்கள் மின்னுகின்றன
அந்தக் கண்களில்
அவர் கனவுகள் அழிந்த துயரம் கசிகிறது.

அகதிகளே
எனதருமைச் சனங்களே
இது நமது முறை
எங்கள் நாட்கள் திரும்பியிருக்கின்றன
வாருங்கள்
எங்கள் விதையை நடுவோம்.

எச்சரிக்கின்றன 'கண்ணி'கள்
அதனாலென்ன.

அம்மா நீயில்லை
துயருடைத்து
ஐயா நீங்களும் சுக்குநூறாகிப்
போய்விட்டீர்கள்

ஊர்கலைந்தோடும் போதிருந்தோரில்
பலர் இன்றில்லை
வெறுங்கையோடு தானிருக்கிறோம்.

நெஞ்சு நிரம்பக் கனவுகள்
நமது குழந்தைகளிருக்கிறார்கள்
இளைய சகோதரர்களிருக்கிறார்கள்
ஈரம் வற்றாத நிலம் வரவேற்கிறது.

**2**

நல்லது, வருக
இங்கே ஒரேயொரு மிஞ்சிய வீதி (A9)
மரணம் வந்துபோக.

அதிலிப்போது விருந்தாளிகளாய் நீங்கள்
நிழலின் முகத்தை
அனல் நக்கிய பதியில்
களைப்பாற முடியாது
சாவு விரட்டிக் கொண்டிருட்கிறது இன்னும்.

ஒளிரும் மணலின் கண்களைக் கவனியுங்கள்
இங்கேயொரு பேரூரின்
இதயமும் வடிவமும்
துடித்துக்கொண்டிருப்பதை.

மேலும்
1990 - 2000
SLA யின் குருதியுறைக்
கத்தி செருகப்பட்ட நாட்கள்
காயம் ஆறாத நிலம்.

அவர்களின் புதைகுழிகளும்இப்புற்களின்
அடியிற்றானாயிற்று
அழிவுக்கு அவர்கள் அளித்த பரிசது.

விழிகளைத் துடைத்துக் கொள்ளுங்கள்
எல்லாம் முடிந்து விட்டன
இப்பொழுது
நீங்களோ விருந்தாளிகள்
நாமோ ஊர்திரும்பியும் அகதிகள்.

'கண்ணி'களைக் கழற்றுங்கள்
ஈரம் வற்றாத நிலத்திலிருந்து
நீரெடுத்துத் தருகிறோம்.

நிழலுக்கும் உணவுக்கும்
மரவள்ளிகளையேனும் நடவேண்டும்
நமது கடந்தகாலத்தின் பரிசு
இப்படித்தானிருக்கிறது பார்த்தீர்களா?

கருணாகரன்

# நினைவுச்சுழிகள்



அந்த ஆத்திமரம்
இன்னும்

அங்குதான் நிற்கிறது
எல்லா நினைவுத்துளிகளையும்
சேமித்துக் கொண்டே...

தென்னங்கீற்றுகளில், நெல்லின் இலைகளில்,
அம்மன் கோவில்தேர் முடியில்
பட்டு வழிந்தநிலவு
உன்னுடையதாக வேயிருந்தது;
உன்னுடையதாக வேயிருந்தது.

இப்பொழுதும்!

உன்னில்
என் விசுவசிப்பின் கனதியை யாரறிவர்?
உனை நினைவுக்குள் அழைக்கும் போதெல்லாம்

மரநிழலிலே எனை ஆராதிக்கும்
உதிர்கின்ற இலைகள் எனை அமைதிப்படுத்துகின்றன...

அன்று -
நீயுதிர்த்த உணர்வு வார்த்தைகளை
மீட்டுப்பார்க்கிறேன்!
மனதுக்குள் ஞாபகச் சிறகுவிரிப்பு
சிலிர்ப்பு.

நீ விடைபெற்ற அந்தக்கணம்
வார்த்தைகள் இன்றி...
மரம் மட்டும் காற்றில் அசைந்தது...

அந்த ஆத்திமரம் இன்னும் இங்குதான்
நிற்கிறது
எல்லா நினைவுத்துளிகளையும்
சேமித்துக்கொண்டே...

இத்தாவில் க. சிவராசா

# எழுதப்படாத மொழியின் சுயரூபம்

அப்படி எதைத்தான் தேடுகிறாய்
உனக்காக நான் வரைகிற
வார்த்தைகளுக்குள் நீ
எனது தவிப்பை,
தனிமையின் பொல்லாத சாட்டையால்
ஒவ்வொருநொடியும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிற
எனது ஆற்றொணா மௌனக்கூச்சலை,
உனது பிரசன்னத்தின் போது
பரவசித்திருந்த பொழுதுகளை, ஞாபகப்படுத்துகிற
ஈர்ப்பின் மீதெழுகிற
வலியின் பழிவாங்கலை,
அதிகம் பேசமுடியாது
மொழிகளைத் தொலைத்து
இருவரும் பிரிந்துபோன
கடைசிச் சந்திப்பின் கடைசிக்கணங்களை-
இப்படியிப்படி......
எவற்றையெல்லாம் தேடுகிறாய்,
கண்கலங்குகிறாய்,
மௌனிக்கிறாய்.
அவநம்பிக்கையின் முதலாவது எழுத்தை
எழுதிவிட்டு
அப்படியெதுவும் நிகழ்ந்துவிடாதென்று
உனக்குள்ளேயே பொய்ச்சமாதானம்
சொல்லிக்கொள்கிறாய்.
எங்கள் வேண்டுகைகளை
நிராகரித்து விட்டதா காலம்
பெருமூச்சுகள் ஏன் இன்னுமின்னும்
வெப்பமாய்ப் பிறக்கின்றன......
யாருக்குப் புரியும் எமது வார்த்தைகள்
எழுதுகோல்களாவது படித்துக் கொள்ளட்டும்
எழுதப்படாத அந்த மொழிகள் பேசுகிற மொழியை,
அவற்றின் வெப்பியாரத்தை.

திருநகரூர் ஜெகா



# இளையநாதம்

## குட்டிக்கதை

# சாப்பாட்டு ராமன்

சிங்கபுரி கிராமத்தில் ராமன் என்ற ஒருவன் இருந்தான். சரியான சோம்பேறி. வேலை செய்யாமல் உடலை வருத்தாமல் சாப்பிட்டுத் தூங்க என்ன வழி.... என யோசித்தான். சொந்தக் கிராமத்தில் அப்படி இருக்க விட மாட்டார்கள். அதனால் அடுத்த கிராமத்திற்குச் சென்றான்.

அங்குள்ள மக்கள் மிகவும் நல்லவர்கள் அவர்களை ஏமாற்றி வாழ கண் தெரியாதவன் போல் நடிக்க ஆரம்பித்தான். அவனுடைய நடிப்பு இயல்பாகவே இருந்தது. இதை நம்பி கிராம மக்கள் அவனுக்கு உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்தனர். அவன் நன்கு அனுபவித்து நிம்மதியாக வாழ்ந்தான்.

ஒரு நாள் கந்தன் அந்தக்கிராமத்திற்கு வந்தான். அவனும் சிங்கபுரி கிராமத்தைச் சேர்ந்தவன். ஆனால் ராமனுக்கு அவனைத் தெரியாது. அங்கு ராமன் சாப்பாட்டு ராமனாகவும், கண் தெரியாதவனாகவும் நடித்துக் காலம் தள்ளுவதைப் பார்த்தான்.

எந்தக்காலத்திலும் ஏமாற்றுதல் என்பது கந்தனுக்கு பிடிக்காத விஷயம். அதனால் ராமனின் ஏமாற்றுதலை முடிவிற்கு கொண்டு வர நினைத்தான். அதனால் ஒரு அதிஸ்டலாபச் சீட்டை வாங்கிக் கொண்டு ராமனிடம் சென்றான். இந்தச் சீட்டுக்கு லட்ச ரூபாய் பரிசு விழுந்தால் நீ ராஜாவாக வாழலாம் வைத்துக்கொள் என்று கொடுத்து விட்டுச்சென்றான்.



சோம்பேறி ராமனும் மிக மகிழ்ச்சியோடு அதை வாங்கினான். ஒரு வாரம் கழித்து ஊர் மக்கள் கூடியிருந்த போது கந்தன் ராமனிடம் வந்து ராமா உன்னிடம் கொடுத்த சீட்டிற்கு லட்ச ரூபாய் பரிசு கிடைத்துள்ளது என்றான். ரொம்பச் சந்தோசம் என்றான் ராமன். " AB 63888942" நம்பர் என்றான் கந்தன். ரகசியமாக கண்ணைத்திறந்து எண்ணைப் பார்த்தான் ராமன். அவனின் சீட்டில் அந்த எண்கள் இல்லை.

உடனே அவன் கந்தனை பிடித்துக் கொண்டான். என்ன என் சீட்டில அந்த இலக்கம் இல்லை என்றான். உன் சீட்டில் இலக்கம் இல்லை என்பதை எப்படிக் கண்டு பிடித்தாய் என்று கேட்டான் கந்தன். ராமன் திரு திருவென முழித்தான்.

இவனுக்கு கண் தெரியும் ஆனால் ரொம்ப சோம்பேறி. அதனால் கண் தெரியாதவன் மாதிரி நடித்து உங்களிடம் தண்டச் சோறு திண்டு வருகிறான் என்று கூறினான் கந்தன்.

அடுத்த நிமிடம் கூடியிருந்த கூட்டம் ராமனைப் பிடித்துத் துவைக்க ஆரம்பித்தது. தலைதெறிக்க ஓடினான் ராமன்.

சு.கௌரீஷன்
மு/வித்தியானந்தாக்கல்லூரி

# வாரம் ஒரு குறள்



ஒருவருடன் நட்புக் கொள்வதென்பது அவரை ஆராய்ந்து அவரது குணம், செய்கைகளை வைத்து எமக்கு அவர் செயல் பிடித்துக் கொண்டு விட்டால் அந்த நட்பானது எந்தக் காலத்திலும் அழியாததொரு சொத்தாகும். ஆராயாது நட்புக் கொள்ளும் போது அந் நட்பைப் பயன்படுத்தி தீய வழிகளில் கூடத் தள்ளிவிட சந்தர்ப்பங்கள் உண்டு. எனவே எது நல்ல நட்பு என எமக்குத் தெளிவாகத் தெரிந்து கொண்டு பழகுதல் நன்று என வள்ளுவனாரும் தன்குறளில் இவ்வாறு சொல்கிறார்.

**"நாடாது நட்டலிற் கேடில்லை நட்பின்**
**வீடில்லை நட்பு ஆள் பகவர்க்கு "**

# வண்ணாத்துப் பூச்சி

சின்னச் சின்னச் பூச்சி
சிறகடிக்கும் பூச்சி
வண்ண வண்ணப் பூச்சி
வண்ணாத்திப் பூச்சி
சிவப்பு மஞ்சல் வெள்ளை
சின்னச் சின்னப் புள்ளியுடன்
என்னைப் பார்த்துப் பார்த்து
எழுந்து மெல்லப் பறக்கும்.

ந.துவாரகி,
தரம்-2
கிளி/கிளிநொச்சி ம.வி.

# ஐக்கிய நாடுகள் சபை பற்றி



ஐக்கிய நாடுகள் நிறுவனம் 1945 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ஆம் நாள் நிறுவப்பட்டது. தொடக்கத்தில் 51 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். தற்போது 159 உறுப்பினர்கள் உள்ளனர்.

இதன் தலைமையகம் நியூயோர்க்கில் உள்ளது. ஐக்கிய நாடுகளின் கொடி வெளிர் நீல நிறமாகும். இதில் வளைவான ஆலிவ் மரக்கிளைகளுக்கு இடையில் உலகப்படம் பொறிக் கப்பட்டிருக்கும்.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அலுவலக மொழிகள் ஆறு வகை. ஆங்கிலம், பிரெஞ்சு, சீன மொழி, ரஷ்யமொழி, அரபி மற்றும் ஸ்பேனிஸ் மொழிகள் ஆகும்.

அ.சீலன்.

# உங்களுக்குத் தெரியுமா?

01) எமது உடலில் உள்ள வாங்கிகள் ஐந்தும் எவை தெரியுமா?
கண், மூக்கு, காது, நாக்கு, தோல்
02) நரம்பிழையத்தின் ஆக்க அலகு
நியூரோன்
03) மண்டையோட்டு நரம்புகள் எத்தனை தெரியுமா?
12 சோடி
04) மின்னைக்கடத்தும் அல்லுலோகம் எது?
காபன்
05) ஆவர்த்தன அட்டவணையை அமைத்தவர் யார் தெரியுமா?
"மெண்டலீவ்"
06) தாவரத்தில் உணவு தயாரிக்கும் பிரதான பகுதி எது தெரியுமா?
இலை
07) பச்சயம் கரையக்கூடிய ஒரு உணவுப் பதார்த்தம் எது தெரியுமா? மதுசாரம்
08) உலோக ஒட்சைட்டுக்கள் பொதுவாக என்ன நிலையில் காணப்படுகின்றது?
திண்மம்.

சு.லயாசினி, தரம்-10
கிளி/கிளிநொச்சி ம.வி

# பொது அறிவு

01) உலகில் மிகப்பெரிய அரண்மனை உள்ள நாடு எது?
வத்திக்கான்

02)இந்து சமுத்திரத்தின் மிகப்பெரிய தீவு எது?
மடகஸ்கார்

03) உலகிலேயே மிகப்பெரிய நூலகம் எது?
லெனின் தேசிய நூலகம்

04) இலங்கையில் முதல் முதல் உருவாக்கப்பட்ட வங்கி எது?
இலங்கைவங்கி

05) சந்திரனின் மறுபக்கத்தை முதல் முதல் படம் எடுத்த விண்கலம் எது?
லூனா 03

கௌசி.வ

## நகைச்சுவை



ஆசிரியர் :- யமனின் வாகனம் எது?!
மாணவன் :- ....?......?!
ரதன் :- எருமை....சேர்.
ஆசிரியர் :- சுதன் நீ சொல்லு... சொன்னது சரியே!
சுதன் :- இல்ல சேர்... முந்தி கிபிரில மேலாலவந்தவர், இப்ப சமாதானம் எண்டதால கயசில (HIACE) றோட்டால வாறார் சேர்...!
மாணவர் :- ஓம்சேர்...!ஓம்சேர்....! அண்டைக்கு பளைக்கும் கயசில வந்துதான் ஒரு அம்மாட உயிர கொண்டு போனவராம்!

எம். எஸ். வரன்,
கிளிநொச்சி.

## ஓவியத்துக்குள் ஓவியம் கண்டு பிடியுங்கள்!



*அழகாக அவிழ்ந்திருக்கும் ரோஜாப் பூக்குள் சோகமாக அமர்ந்திருக்கும் ஓவியத்தைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.*

இ.ராஜ்குமார்,
மு/புதுக்குடியிருப்பு ம.வி.

# குறுக்கெழுத்துப் போட்டி 05

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | | 03 | 04 | | |
| 07 | | | | | |
| | | | | | 18 |
| | 20 | | 22 | | |
| 25 | | | | 29 | |
| 31 | | | | | |

**இடமிருந்து வலம்**

01)ஒலிம்பிக்கில் ஊக்க மருந்து பாவித்ததாக குற்றம் சாட்டப்பட்ட இந்திய வீராங்கனை.
07)இயல்பு குழம்பியுள்ளது.
22)தகுதி குழம்பியுள்ளது.
25)பற்று நீங்கிய வழிபாடு.
29) கிரகம் மாறியுள்ளது.
31)வாய் திறத்தல் மாறியுள்ளது.

**மேலிருந்து கீழ்**

01)தாமதித்தல்
03)விண்மீன்
04)மதுவகைகளில் ஒன்று குழம்பியுள்ளது.
18)மிகவும் கொடுமை தலைகீழாக உள்ளது.
20)பிழை தலைகீழாக உள்ளது.

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி -03
பரிசுக்குரியவர்
பு.சிந்து
புதுக்குடியிருப்பு
பாராட்டுக்குரியவர்கள்
01)கா.கரன்
கிளிநொச்சி.
02)மா.பிரதீஸ்
விசுவமடு.
இடமிருந்து வலம்
01)பொதிகை
09)சிர(ம்)
11)வறுமை
17)கலையம்
21)தீ
23)புனல்
மேலிருந்து கீழ்
01)பொறுமை
02)திரவம்
05)அரசியல்
13)கறு(ப்)பு
19)அனலை

குறுக்கெழுத்துப்போட்டி இல.05
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

திட்டமிடாத செயல்கள் யாவும் நஷ்டத்தையே தரும். - யாரோ

# கயிலை வன்னியன்: வரலாறும் ஆள்புலமும்

**முல்லைமணி**

> "வன்னியர்களைப் பொறுத்த மட்டில் அவர்களைத் தங்களுக்கு கீழ்ப்படியச் செய்வதில் போர்த்துக்கீசர் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கினார்கள். அவர்கள் வன்னியரை ஒருபோதும் தங்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வர முடியவில்லை. கட்டளை அனுப்பினாலும் வன்னியர் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. இவ்வண்ணம் கயிலை வன்னியன் பன்னிரண்டு அல்லது பதினான்கு ஆண்டுகள் யாழ்ப்பாணம் வரவில்லை."



வட இலங்கை வரலாற்றில் வன்னிப்பிரதேச வரலாறு குறிப்பிடக் கூடிய முக்கியத்துவம் உடையது. யாழ்ப்பாண இராச்சியம் தோற்றம் பெறுவதற்கு முன்பே வட இலங்கையிலும், கிழக்கிலங்கையிலும் குறுநில அரசுகள் இருந்தன. வன்னியர்கள் இப்பிரதேசத்தை ஆளத் தொடங்கியபின்பே வன்னி நாடு என அழைக்கப்படுகின்றது.

இலங்கையில் தமிழ், சிங்கள பிரதேசங்களில் வன்னிமைகள் என அழைக்கப்பட்ட சிற்றரசுகள் காணப்பட்டன. அடங்காப்பற்று, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய பிரதேசங்களில் வன்னிமைகள் இருந்தமைக்கு சான்றுண்டு. எனினும் அடங்காப்பற்றே இன்று வன்னி என்னும் பெயருக்கு உரிமை பூண்டு நிற்கிறது. பனங்காமம், செட்டிகுளம், மேற்பற்று, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, கருநாவல்பற்று, தென்னன்மரவடி என்னும் ஏழு வன்னிமைகளை உள்ளடக்கியதாக அடங்காப்பற்றுத் திகழ்கிறது.

அடங்காப்பற்றின் ஏறக்குறைய அரைவாசிப்பிரதேசம் பனங்காம வன்னிமையாக இருந்தது வன்னிமைகள் அனைத்திலும் பனங்காமமே கீர்த்தியும் வலியும் பொருந்தியதாக விளங்கியது. 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஈழத்திற்கு வந்திருந்த அட்றியன் ரேலண்ட் (Adrean Reland) என்னும் ஒல்லாந்தர் தாம் அவதானித்த ஆட்சி எல்லைகள் பற்றிப் பின்வருமாறு கூறுவர்: இத்தீவின் பெரும் பகுதி தமிழரின் வாழ்விடமாகும். கைலாய வன்னியனால் (Coitat Manea) ஆட்சிபுரியும் நாடு என அழைக்கப்படும். இங்கு வாழ் மக்கள் சிங்களவரின் ஆட்சிக்கோ அல்லது ஒல்லாந்தரது ஆட்சிக்கோ உட்பட்டவரல்லர். கி.பி 1660 - 1679 வரை கண்டியரசனின் கைதி யாக இருந்த றொபேட் நொக்ஸ் (Robert Knox) என்ற ஆங்கிலேயரும் தமது நூலில் கைலை வன்னியனின் ஆட்சி எல்லை வன்னிப் பகுதிகள் மட்டு மன்றி கொட்டியாரப்பற்று வன்னிமை, பாணமை வன்னிமை முதலான பிரதேசங்கள் வரை பரந்திருந்தது என வரைபடம் மூலம் குறித்துக் காட்டியுள்ளார். இதிலிருந்து பனங்காம வன்னியனான கயிலைவன்னியனின் ஆள்புலம் கிழக்கிலங்கையில் பரந்திருந்ததை அறிய முடிகின்றது.

பனங்காமம் பெயரளவில் யாழ்ப்பாண அரசிற்குக் கீழ்ப்பட்டதாகக் கருதப்பட்ட போதும் நடைமுறையில் கயிலைவன்னியன் யாழ்ப்பாண அரசின் மேலாண்மையை ஏற்றுத திறை செலுத்தவில்லை. இம் மன்னன் சுதந்திர அரசனாகவே இருந்தான். வன்னியின் உள்ளூர் நிர்வாகம் முழுவதும் இவனிடமே இருந்தது. முதலியார், கங்காணி, பண்டாரப்பிள்ளை, தலையாரி, அடப்பனார், மொத்தக்கர் என்னும் எல்லா நிர்வாகிகளையும் இவனே நியமித்தான். அத்துடன் பனங்காம வன்னிமையிலுள்ள வாரம், தீர்வை, காணிக்கடன், ஆள்வரி முதலிய எல்லாவரிகளையும் இவனே பெற்றான். படைகளை வைத்திருந்தான். வெண்கொற்றக் குடை, சாமரம், ஆசனம் ஆகிய பதவிச் சின்னங்கள் இவனிடம் இருந்தது. அந்நியர் எதிர்ப்பு எனவரும் போது கயிலை வன்னியன் தலைமையில் எல்லா வன்னியரும் ஒன்றுபட்டனர்.

கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப்பட்டயத்தை நோக்குமிடத்து! கயிலை வன்னியனா பெருமளவு அதிகாரம் உடையவராய் இருந்திருக்கிறார் என அறிய முடிகிறது. சாசனத்தில் குறிப்பிடப்படும் கரிக்கட்டுமூலை தென்னமரவடி, மேற்பற்று முள்ளியவளை, பச்சிலைப்பள்ளி வன்னியர்கள் இவரைத் தங்கள் கயிலைப்பிள்ளை வன்னியனார் என விழித்துக் கொள்வதிலிருந்து இவருக்கு ஏனைய வன்னியர்களே கட்டுப்பட்டவராக இருந்திருக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட வன்னியர்களில் கயிலை வன்னியனார் தவிர ஏனையோரின் பெயர்களுக்கு முன் தொன்பிலிப், தொன்கஸபார், தொன்தியோகோ, தொன்அந்தோனி என்னும் கத்தோலிக்கப் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஒல்லாந்தரின் ஆவணங்களில் இதனைக் காணலாம் எனினும் இவர்கள் பெயரளவிற்கே கத்தோலிக்கராக இருந்தனர். மறைமுகமாச் சைவ சமயத்தையே கடைப்பிடித்தனர். சைவசமயத்தினரின் புனிதஸ்தலமான சிதம்பரத்திற்குத் தானம் வழங்கினர்.

கயிலை வன்னியனார் யாழ்ப்பாணம் பரராசசேகரமகாராசாவின் சிதம்பர மடத்திற்குச் சில நிற்பதங்கள் விட்டிருந்தார்.. யாழ்ப்பாண மன்னர் குலம் அழிவுற்ற பின்னும் வன்னிக் குறுநில மன்னர்கள் சிதம்பரத்திலுள்ள மடத்தை ஆதரித்து வந்தனர். வன்னியர் சிதம்பரத்தைக் கைலாயமாகவே கருதினர் பட்டையத்தில் பூலோக கயிலாயமாகிய சிதம்பரத்திலே என்னும் தொடர் இடம் பெறுகின்றது.

இலங்கையில் போர்த்துக்கீசர் ஆட்சியின் பிற்பகுதியிலும் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியிலும் கயிலை வன்னியனார் (ஆட்சி ஆண்டு 1644 - 1678) பனங்காமத்தில் ஆட்சி புரிந்திருக்கிறார் என ஒல்லாந்தரின் குறிப்பிலிருந்து தெரிய வருகிறது. இதனை ஆராய்ந்த பேராசிரியர் சி.அரசரத்தினம் பின்வருமாறு கூறுகின்றார்.

"1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தின் மேல் படையெடுத்த போது கயிலை வன்னியன் என்பவனே மிகக் கூடிய அதிகாரம் உடையவனாய் இருந்தான். வன்னி மாகாணங்களில் செல்வவளம் உடையதும் மிகப் பெரியதுமான பனங்காமம் பற்றுக்கு இவன் பொறுப்பாக இருந்தான். சமகாரத்தைச் சேர்ந்த ஐரோப்பியர் சிலர் கயிலை வன்னியனைப்பற்றிக் குறிப்பிடும் போது அவனை அரசன் எனக் கூறியுள்ளனர்.

மத்திய அதிகாரத்தைப் பொறுத்து இவன் அதனுடன் கொண்ட தொடர்பும் மத்திய அரசாங்கம்பற்றிக் கொண்டிருந்த கருத்தும் இவன் தான் ஒரு அரசன் என்ற நிலைக்கு எந்த விதத்திலும் குறைந்தவன் என நினைக்கவில்லை என்பதனைக் காட்டுகின்றன. போர்த்துக்கீச ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில் அவனை யாழ்ப்பாணக் கோட்டைக்கு வரவழைக்கும் அவர்களது கட்டளையைப் புறக்கணித்தான். ஒல்லாந்தர் போர்த்துக்கீசரிலும் பார்க்கத் தங்கள் அதிகாரங்களை நிலை நாட்டுவதில் அக்கறை உடையவர்களாக இருந்தனர்.

ஆரம்பத்திலிருந்தே இவர்கள் கயிலை வன்னியனது அதிகாரத்தை அவன் தங்களில் தங்கியிருக்குமளவிற்கு - குறைக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தார்கள். குறிப்பாக ஒல்லாந்தர் கயிலைவன்னியனார் தங்களுக்கு கொடுக்க வேண்டிய கடன்களை ஒழுங்காகவும் தாமதமின்றியும் பெற்றுக்கொள்வதில் அக்கறையுடையவராக இருந்தனர்.

ஒல்லாந்தர் மேற்கொண்ட ஆரம்ப நடவடிக்கைகள் கயிலை வன்னியனாருடன் அவர்களை முரண்படச் செய்தன. ஒல்லாந்தருக்கெதிரான எதிர்ப்பியக்கத்துக்குக் கயிலை வன்னியன் தலைமை தாங்கினான். ஒல்லாந்தரின் கட்டளைக்கு அடிபணிந்து யாழ்ப்பாணத்திற்குப் போகாது விட்டான். ஒல்லாந்தர் கயிலை வன்னியனைக் கைப்பற்றுவதற்குப் பெரிதும் விரும்பியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அந்த நேரத்தில் வன்னிக்குப் படை அனுப்ப முடியாதவர்களாக இருந்தனர்.

இதனால் சிலகாலத்துக்குக் கயிலை வன்னியனுடன் இராசதந்திர நட்புறவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தார்கள். டச்சுக் கவர்ணரான தோமஸ் வான்ற் (1692 -1697) பின்வருமாறு எழுதினார்:

"வன்னி ஆட்சியாளர்கள் ஒரு காலைக் கொம்பனியாரின் (ஒல்லாந்தரின்) மண்ணிலும் மற்றையதைக் கண்டி அரசனின் பிரதேசத்திலும் வைத்திருக்கிறார்கள். போர்த்துக்கீசருக்குப் போலவே ஒல்லாந்தருக்கும் அவர்களின் நடவடிக்கைகள் சினமூட்டுவனவாக இருக்கின்றன. வன்னித் தலைவர்கள் வருடாந்தத் திறையான யானைகளையும், நில வரிகளையும் ஒழுங்காகச் செலுத்துவதில்லை. கவர்ணரால் அழைக்கப்பட்ட போதும் வருடந்தோறும் நடைபெறும் தர்பாருக்குச் சமுகமளிப்பதில்லை. விசேடமாகக் கயிலை வன்னியன் தொடர்ச்சியாகப் பன்னிரண்டு ஆண்டுகள் டச்சுக் கவர்ணர்முன் சமுகமளிக்கவில்லை"

1661 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இருபத்தாறாம் திகதி தேசாதிபதி றைக்லொவ் வான்கூன்ஸ் எழுதிய அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"வன்னியர்களைப் பொறுத்த மட்டில் அவர்களைத் தங்களுக்கு கீழ்ப்படியச் செய்வதில் போர்த்துக்கீசர் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கினார்கள். அவர்கள் வன்னியரை ஒருபோதும் தங்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரமுடியவில்லை. கட்டளை அனுப்பினாலும் வன்னியர் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. இவ்வண்ணம் கயிலை வன்னியன் பன்னிரண்டு அல்லது பதினான்கு ஆண்டுகள் யாழ்ப்பாணம் வரவில்லை."

கயிலை வன்னியன்னியன்; கண்டியரசன் இரண்டாம் இராசசிங்கனின் (1635 - 1687) நண்பனாகவும் ஆதரவாளனாகவும் இருந்தான். கண்டிமன்னனுக்கும் கயிலை வன்னியனுக்குமிடையே கடிதத் தொடர்பு இருந்தது. இருவரும் பரஸ்பரம் நட்புறவை வளர்த்துக் கொண்டனர். கண்டி அரசன் 1675 இல் ஒல்லாந்தருக் கெதிராகப் படையெடுத்த போது கயிலை வன்னியன் இப்படைக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தான். இப்படை ஒல்லாந்தரின் இரண்டு கோட்டைகளைக் கைப்பற்றியது.

கயிலை வன்னியன், கண்டியரசன் நட்புறவுக்குக் காரணம் அவன் வன்னித் தலைவர்களது ஈடிணையற்ற தலைவனாக இருந்ததாலேயாகும்.

ஒல்லாந்த பிரதேசங்களிலிருந்து வன்னியுள் நுழைந்து கொள்ளும் குற்றவாளிகளையும், கொலையாளிகளையும், அடிமைகளையும் கைது செய்து ஒல்லாந்த அதிகாரிகளிடம் வன்னியர் ஒப்படைக்க வேண்டும். அடிமை ஒருவனைக் கைப்பற்றி அவனது எசமானனிடத்து ஒப்படைக்குமிடத்து வன்னியருக்கு இரண்டு இறை சால் கொடுக்கப்படும். இக்கடமையில் தவறின் வன்னியர் தமது கவனக் குறைவிற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு டச்சு நிர்வாகத்திற்கு ஐம்பது இறைசால் தண்டப்பணம் செலுத்த வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது. எனினும் கயிலை வன்னியன் இதனை என்றுமே அனுசரித்ததில்லை.

தேசாதிபதியின் மகனான இளைய வான் கூன்ஸ் 1671இல் பாணமை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிய பின் தனது படையுடன் முல்லைத்தீவில் வந்திறங்கி அங்கிருந்து வன்னிக்குள் நுழைந்து ஐயம் பெருமாள் குளத்தில் தங்கினான். வன்னியர்கள் அங்கு சென்று சமாதானம் செய்து கொண்டனர். ஆனால் கயிலைவன்னியன் செல்லவில்லை. கயிலைவன்னியன் பற்றியும் சகோதரிபற்றியும் யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்புண்டு.

கயிலை வன்னியனின் சகோதரியை யாழ்ப்பாணத்திலிருந்த பூதத்தம்பி முதலியார் திருமணம் செய்தார். மனுவேல் அந்திராசி டச்சு நிர்வாகத்தில் இன்னொரு முதலியாராகப் பணியாற்றினார். தேசாதிபதி அந்திராசி முதலியின் ஆப்த நண்பனாய் இருந்தான். தேசாதிபதியின் தம்பி (சின்னலாந்தேசு) பூதத்தம்பி முதலியாரின் பிராண சிநேகிதனாக இருந்தான்.

பூதத்தம்பி, அந்திராசியை வீட்டிற்கு அழைத்து விருந்திட்டான். பூதத்தம்பி முதலியின் மனைவியின் பேரழகைக் கண்டு அந்திராசி விகார மயக்கம் கொண்டான். அந்திராசி அவளை அடைய விரும்பிப் பரிசுப் பொருள்களுடன் தூதுவனை அனுபபினான். சினங்கொண்ட அவள் துடைப்பத்தினால் அடித்துத் துரத்தினாள். அவளின் அகம் பாவத்தை அடக்கும் நோக்கில் பூதத்தம்பிக்கு எதிராக அந்தி ராசி சூழ்ச்சிவலை பின்னினான்.

அரசாட்சி வேலைக்கு மரங்கள் அழைப்பிக்க கச்சாய்த் துறை முகத்திற்குக் கட்டளை அனுப்ப வேண்டும் என்று அந்திராசி கூறிப் பூதத்தம்பியிடம் வெள்ளைத் தாளில் கையொப்பம் வாங்கினான். அதில் கோட்டையைப் பிடிக்க உதவிசெய்வதாகப் பறங்கியருக்கு (போர்த்துக்கீசருக்கு) பூதத்தம்பி எழுதியதாக எழுதி தேசாதிபதிக்குக் கொடுத்தான். ஊர்காவல் துறைக் கடற்கோட்டை கட்டுவிப்பதற்குச் சின்னலாந்தேசு சென்ற சமயத்தில் அந்திராசி இந்தச் சூழ்ச்சியைச் செய்தான். பூத்தம்பி குற்றவாளியாக்கப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

விளம்பி வருடம் புரட்டாதி மாதத்தில் இந்த அநியாயமான கொலையைக் குறித்து கயிலை வன்னியன் கொழும்புக்குச் சென்று வழக்காடிய போது பூதத்தம்பி சூழ்ச்சியால் கொல்லப்பட்ட விஷயம் தெளிவாகியது. தேசாதிபதியையும் அந்திராசியையும் கொழும்புக்கு வருமாறு கட்டளை பிறப்பிக்கப் பட்டது.

கொழும்புக்குச் செல்லும் போது தேசாதிபதி கடலில் விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டான். அந்திராசியை ஆனை இடறிக் கொன்றது.

வைபவமாலையை எழுதிய மயில்வாகனப்புலவர் யாழ்ப்பாண நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்த கொமாண்டரையே தேசாதிபதி எனக் குறிப்பிடுகின்றார். தேசாதிபதி கொழும்பில் இருந்தார்.

ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகாலம் வன்னியின் சுதந்திரத்தைக் கட்டிக்காத்து ஆட்சிபுரிந்த தன்னிகரில்லாத் தலைவன் கயிலை வன்னியன் 1678இல் மரணத்தைத் தழுவிக் கொண்டான்.

கயிலை வன்னியனுக்கு ஏற்பட்ட மரணம் ஒரு அடங்காத் தனமான அதிகாரமுள்ள ஒரு வன்னிப் பெருந்தலைவனை, வன்னியர்களை ஒன்று திரட்டி அந்நியரை எதிர்த்த ஒருவனை வன்னிநாடு இழக்கச் செய்தது.

பத்தேவியா டாக் பதிவேடு தரும் தகவலின்படி கயிலைவன்னியனின் மரணத்தைத் தொடர்ந்து அவரின் பேரன் முறையான காசியனார் டச்சு நிர்வாகத்தின் எவ்வித தலையீடுமின்றி பனங்காம வன்னிமையின் ஆட்சியாளனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கண்கள் தங்களை நம்புகின்றன. ஆனால் காதுகளோ பிறரையே நம்புகின்றன - யாரோ

# சிறுவர் கல்வியிற் சில சிக்கல்கள்
# உதவி மனங்களை வளர்த்தெடுப்பது பற்றி...



**1**

**அன்பான** பெற்றோர்களே உங்களின் பிள்ளைக்கு ஐந்து வயதாகிவிட்டது. தாமதியாமல் பாடசாலைக்குக் கூட்டிச் சென்று பிள்ளை படிப்பதற்கு வழி செய்யுங்கள்.

நண்பர்களே, உங்களின் அயலில் வறுமையாலோ அல்லது பெற்றோரின் அக்கறையின்மையாலோ ஒரு பிள்ளை பாடசாலைக்குப் போகாதிருந்தால் தயவு செய்து அந்தப்பிள்ளை பாடசாலை செல்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்

ஒருவரைக்கல்வியறிவூட்டுவது எங்களின் முதன்மைச் செயற்பாடாக இருக்கட்டும்.

நாங்கலெல்லோரும் கூடிச் சமூகமாகவே வாழ்கின்றோம். அப்படி வாழவேண்டிய தேவை ஒவ்வொருவருக்குமுண்டாவது தவிர்க்கமுடியாதது. கூடிவாழும் போது அறிவுயர்ச்சி பெறாதவருடன் இணைவது சிரமமானது. அறிவுயர்ச்சி சிந்தனையின் அடித்தளமுமாகும். சிந்தனையே செயற்களத்தை விரிக்கிறது. சிந்தனையும் செயற்களமுமே ஒரு சமூகத்தின் வளர்ச்சியாகும்; மனிதனின் வளர்ச்சியாகும் - நமது வளர்ச்சியாகும்.

எனவே, பிள்ளைகளை படிக்க அனுப்புவோம். சிறுவர்கள் படிப்பதற்காக எல்லோரும் உதவுவோம்.

**2**

ஒப்பீட்டளவில் கல்வியறிவுடையோர் வீதத்தைப் பொறுத்த வரையில் கூடுதலானவர்கள் என்ற இடத்தில் நாமும் உண்டென்ற பெருமை எங்களுக்குண்டு.

எந்த நிலையிலும் கல்விக்கு நாங்கள் கொடுக்கிற முதன்மையும் கூடத்தான்.

கஸ்ரப்பட்டு உழைத்தாவது, இயலாதபோது பொருள், பண்டங்களை விற்றேனும், அதுவுமியலாதபோது காணியைக் கூட ஈடுவைத்தோ அறுதியாக விற்றோகூடப் பிள்ளைகளைப் படிப்பிக்கிறவர்கள் நாங்கள்.

'கல்வியைக் கண்' என்பவர்கள்.

'கல்வியிற் சிறந்தது உலகில் வேறெதுவுமில்லை' என்பவர்கள்.

அதிலும் 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பவர்கள்.

இப்படி கல்விபற்றி நிறைய மதிப்புரைகள் நம்மிடமுண்டு நமக்குமுண்டு.

ஆனால், இவ்வாறு கல்வியின் பெறுமதியை விளங்கிய நமது சூழலில் கல்வியறிவு பெறுவதற்கு வசதியற்றிருக்கும் பிள்ளைகளைப் பற்றியும் நாம் கொஞ்சம் யோசிக்க வேண்டுமல்லவா.

பல பிள்ளைகள் பாடசாலைக்குப் போகாமலே இருக்கிறார்கள். இன்னும் பல பிள்ளைகள் பாடசாலையை - படிப்பை இடையில் விட்டவர்களாக இருக்கின்றார்கள். இன்னும் சில பிள்ளைகள் இளமையிலேயே வேலைக்கு போகிறார்கள். இன்னும் சில பிள்ளைகளை நம்மிற்சிலர் வேலைக்கமர்த்தி வைத்திருக்கின்றோம்.

உலகம் முழுவதும் கல்வியறிவூட்டுவதற்கான நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன. அறிவின் வலுச்சமனிலையே விடுதலைக்கான விழிப்பையும் வாழ்க்கைச் சமதையையும் தரும்.

நாங்களும் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும்.

எங்கள் பிள்ளைகள் மட்டும் படித்தாற்போதும். மற்றவர்களின் பிள்ளைகள் படிக்காமலிருந்தால் அவர்களைக் குறைந்த சம்பளத்திற்கு வேலைக்கமர்த்தலாம். அல்லது அவர்களின் மேல் ஆட்சி நடத்தலாம் என்ற எண்ணம் எங்களிற்கிருக்கக் கூடாது.

**3**

படிக்கும் திறனிருந்தும் பல பிள்ளைகள் வசதியின்றியிருக்கிறார்கள். பல பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களேயில்லாமல் பாடசாலைக்குப் போக முடியாதநிலையிருக்கிறது.


உரிய நேரத்தில் பிள்ளைகளுக்கான பிறப்புப் பதிவைச் சில பெற்றோர் செய்யத் தவறி விடுகிறார்கள். சிலபெற்றோருக்கு கல்வியறிவற்ற தனத்தினாலும் பிறப்பத்தாட்சியின் முக்கியத்துவம் பற்றித் தெரியாமையாலும் இதைச் செய்யாமல் விடுகிறார்கள்.

விளைவு-பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்க்க முடியாமற்போகிறது. அது மட்டுமல்ல பின்பு அந்தப்பிள்ளை தன்வாழ்வில் எந்தத் தேவையையும் நிறைவேற்ற முடியாத ஒரு நிலைமையும் ஏற்பட்டு விடுகிறது.

இதுதவிர இடம்பெயர்ந்தமையால் பல பிள்ளைகளுக்கான பிறப்பத்தாட் சிப்பத்திரங்களைப் பெறுவதில் பல சிரமங்களைப் பிள்ளைகளும் பெற்றோரும் எதிர்கொள்கின்றனர்.

இவையெல்லாம் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது பெரும் பிரச்சினைகளாக இருக்கின்றன. பிறப்புப்பத்திரமில்லாமல் நாம் எப்படிப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள முடியும்? என்று கேட்கின்றனர் அதிபர்கள்.

அவர்களுடைய கூற்றில் நியாயமுண்டுதான். சட்டரீதியான பிரச்சினைகளும் அவர்களுக்கிருக்கின்றன. ஆனால் யதார்த்தத்தையும் கணக்கெடுக்கத்தான் வேண்டும்.



**வெளிவாசல் பாலன்**

பெற்றோரின் அறிவு நிலை, அவர்களின் வசதியீனங்கள், பிள்ளையின் எதிர்காலம் எல்லாவற்றையும் கவனிக்க வேண்டிய ஒரு பொறுப்பு நம் எல்லோருக்கு முண்டு. இதை மனதில் வைத்துப் பார்த்தால் அதிபர்களோ அல்லது கல்வி அதிகாரிகளோ இந்தப் பிள்ளைகளை நிச்சயம் பாடசாலையில் சேர்த்துக் கொள்வார்கள். பிள்ளைகளின் எதிர்காலமும் பாதிக்கப்படாது.

அதேவேளையில் சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோருக்கு வழிகாட்டி, அவர்களை ஊக்குவித்து பிள்ளைகளுக்கான பிறப்புப் பத்திரத்தைப் பதியவோ, எடுக்கவோ உதவலாம். அப்படி உதவவேண்டியது ஒரு தார்மீகக் கடமையும் கூட.

பிறப்பத்தாட்சிப்பத்திரங்களின்றி பாடசாலைக்குப் போக முடியாத மாணவர்கள் பற்றிச் சிந்திக்கும் போது இன்னொரு ஞாபகமும் வருகிறது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்தம் மூண்ட பின், இடப்பெயர்வுகள் நிகழத் தொடங்கியபின் அரசாங்கத்தின் ஒரு விதியிணக்கத்தில் பிறப்பத்தாட்சிப்பத்திரம், பாடசாலை விடு கைப்பத்திரமில்லாத மாணவர்களையும் ஒரு விசேட ஏற்பாட்டின் படி சேர்க்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறகு பெற்றோர் உரிய ஆவணங்களைச் சேர்ப்பிக்கலாம் எனவும் அதிலுண்டு.

இப்படி நிலைகளும் வழிமுறைகளுமிருக்கும் போது இவற்றைக் கணக்கிலெடுக்காமல் பிடித்த பிடியாக நின்று உரிய ஆவணங்களின்றிவரும் பிள்ளைகளை மறுப்பதும், பெற்றோரை நிராகரிப்பதும் சிறுவர்களின் எதிர்காலத்தில் மண்ணள்ளிப் போடுவதாகவே இருக்கும்.

எத்தனையோ நிறுவனங்கள், அமைப்புகளெல்லாம் கல்வியை மேம்படுத்த பல திட்டங்களை முன்வைக்கின்றன. பல திட்டங்களைச் செயற்படுத்துகின்றன. பல மில்லியன்களைச் செலவளிக்கின்றன. ஆனால் இத்தகைய ஒரு அடிப்படைச் சிக்கலான நிலையை மாற்ற ஏற்றவழிகளைப்பற்றி யோசிப்பது இல்லை.

வேண்டுமானால் பாடசாலைக்குச் செல்லாமல் நிற்கும் பிள்ளைகளைக் கேட்டுப் பாருங்கள் "நீ ஏன் பாடசாலைக்குப் போகவில்லை" என்று.

அந்தப்பிள்ளை சொல்லும் -

"எனக்குப் பிறப்புச் சேட்டிவிக்கற் இல்லை பள்ளிக் கூடத்தில் சேர்க்கமாட்டினமாம்" என்று.

அந்தப் பிள்ளைக்கு அதற்கு மேல்தெரியாது.

ஆனால் அது வளர்ந்த பின் அறிகிறது தனது கடந்த காலத்தில் எவரும் ஒரு நல்ல பாதையைத் திறக்காமல் விட்டதன் துயரத்தை. பார்த்தீர்களா ஒரு சிறு தடை ஒரு மனிதனின் வாழ்வை எப்படித்திசை மாற்று கிறது என்பதை.

ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பார்கள்.'கல்வி நமது கண்' என்போம்

அனுபவ வார்த்தைகளின் அர்த்தத்தை நம் வாழ்வுடன் இணைப்போம். எப்பாடுபட்டேனும் சிறுவர் கல்வியையும், உரிமைகளையும், எதிர்காலத்தையும் காப்போம். ஏனெனில் அது நமது அன்புக்குரிய குழந்தைகளின் எதிர்காலம். அவர்களது மகிழ்ச்சிக்கும் வாழ்க்கைக்குமான காலமல்லவா!

---

# பன்முகம் -7
# நல்லமனம்

**சென்னை**, தேனாம் பேட்டை, எல்டம்ஸ ரோட்டில் பெரியதொரு ஒலிப்பதிவுக் கூடம் உண்டு லூதரன்ஸ் திருச்சபையால் நடாத்தப்படும் கிறிஸ்தவ கலைத் தொடர்பு சேவை நிலையம் (**CACS**)

வானொலி நிகழ்ச்சிகள், இசைப்பாடல்கள், விளம்பரங்கள் போன்றவை இங்கு தயாரிக்கப்படும், சினிமாத்துறையில் உள்ள பாடகர்கள், நடிகர்கள், மற்றும் கலைஞர்களும் ஒலிப்பதிவுக்காக அடிக்கடி வந்து போவார்கள்.

1978ல் இந்தக் கலை நிலையத்தில் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பது பற்றிப் படிக்கச் சென்றிருந்தேன். இந்த வாய்ப்பை ஏற்படுத்தி இதற்கான புலமைப்பரிசிலை எனக்குப் பெற்றுத்தந்தவர் இன்றைய திருமலை - மட்டு நகர் ஆயரும் அன்றைய யாழ். ஆயரின் செயலாளரும், மறை பரப்பு இயக்குநருமாக விளங்கிய அருள் திரு. கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்களே.

திரைப்பட வசன ஆசிரியர்களான திரு. நெல்லைராஜன், மற்றும் அன்னை வேளாங்கண்ணி' படத்தின் வசன ஆசிரியர் திரு. சாம்.டி.தாசன் ஆகியோரும் அப்பொழுது அந்த நிறுவனத்தில் பணிபுரிந்து கொண் டிருந்தனர்.

திரு.நெல்லைராஜனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டவர்களின் இருவர் முக்கியமானவர்கள் இருவரில் ஒருவர் இன்றைய திரைப் படங்களில் நகைச்சுவை நடிகராக விளங்கும் திரு. குமரிமுத்து, மற்றவர் கவிஞர் முருகானந்தம்.

இங்கு நான் கூறவருவது கவிஞர் முருகானந்தம் பற்றியே. அவரைப் பார்த்தவுடனேயே அவரது அடக்கம், பண்பு? வறுமையை புரிந்து கொள்ளலாம். ஆற்றல் மிக்கபெரும் கவிஞர் அவர் என்பதை அவரைப்பார்த்துப் புரிந்து கொள்ள முடியாது.

"இவரு ரொம்ப நல்ல மனுசனுங்க, சிறந்தகவிஞர் தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால் பிழைக்கத் தெரியாத மனுஷன்" என்று நெல்லைராஜன் கூறியபோதே அவரைப் பற்றி முழுமையாக அறிய முடிந்தது. அவரது அறிமுகத்தை அடக்கமாக ஏற்றுக் கொண்டு புன்னகைத்தபடி அடக்கத்துடன் கை கூப்பி வணக்கம் தெரிவித்தார் கவிஞர்.

கவிஞர் ஒரு தீவிர தி.மு.க ஆதரவாளர் அடிமட்டத் தொண்டர்களில் ஒருவர் கலைஞர் திரு. மு. கருணாநிதிக்கு மிகவும் அறிமுகமானவர். கட்சிப்பணிகளில் கலைஞரோடு சேர்ந்து ஒன்றாக வேலை செய்தவர். நாளடைவில் கலைஞர் முதலமைச்சர் ஆனதன் பின் இருவருக்கும் இடையே உள்ள நெருக்கம் குறைந்து விட்டது. கவிஞர் தாமகவே ஒதுங்கிக் கொண்டார்.

அந்நாள்களில் ஒரு முறை கலைஞரின் விழாவுக்குச் சென்று வாழ்த்துத் தெரிவிக்க விரும்பினார் கவிஞர். அப்பொழுது கலைஞர் இருந்த உயர்நிலையில் அவருக்கு தகுதியான பரிசில் வழங்கக் கூடிய நிலையில் கவிஞர் இல்லை. எனினும் பிறந்தநாளில் சென்று வாழ்த்துக் கூறவிரும்பினார். எனினும் கலைஞரிடம் போகும் போது கையிலே பழத்தட்டு ஒன்றைக் கொண்டு சென்றார். அத்தட்டில் திராட்சை, முந்திரிகை, கதலி ஆகிய முக்கனிகள் இருந்தன.

கவிஞர் அன்பளிப்பாகக் கொண்டு சென்ற பழத்தட்டில் பொதிந்துள்ள பொருளை மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லையாயினும். "பாம்பின் காலைப் பாம்பறியும்" என்பது போல முதல்வர் கலைஞர் புரிந்து கொண்டு புன்னகைத்தார் கவிஞரின் தோற்றத்தையும் அவரது ஏழ்மை நிலையையும் அந்தநிலையிலும் தன்னை நாடிவந்து வாழ்த்துக் கூறிய நட்பினையும் எண்ணி கலைஞர் நெகிழ்ந்து போனார்.

இறுதியாக கவிஞர், கலைஞரிடம் விடைபெறும் போது கலைஞர் கூறினார் "முருகானந்தம் நான் தற்பொழுது முன்னரைவிட நல்ல நிலையில் இருக்கின்றேன். என்னால் முடிந்த அளவுக்கு உதவ முடியும். உனக்கு என்ன வேண்டும் என்று தயங்காமல் கேளு செய்கிறேன்." என்றார்.

கலைஞரின் ஒவ்வொரு சொல்லிலும் பழைய நட்பின் உரிமையும், தொனியும், உதவ வேண்டும் என்ற உணர்வும் தெரிந்தது.

கலைஞரின் இந்தச் சொற்களைக் கேட்ட கவிஞர் முன்னே, பின்னே யோசிக்காமல் உடனே பதில கூறினார் "நீங்க நல்லா இருக்கணும் சாமி, அது ஒண்ணுதான் எனக்கு வேணும்" என்று ஆசி கூறியவராக கலைஞரிடம் இருந்து எதையுமே எதிர்பாரதவராக கை கூப்பி விடை பெற்று வெளியேறினார்.

கவிஞரின் இந்தச் செயலைப்பற்றி திரு. நெல்லைராஜன் கூறக்கேட்டு நான் உண்மையில் வியந்து போனேன். அந்தக் கவிஞர் பிழைக்கத் தெரியாதவராக அல்ல பிழை செய்யத் தெரியாதவராக என் கண்முன் காட்சியளித்தார். அப்பொழுதும் அவரது முகத்தில் அடக்கமான அதே புன்னகை.

"கடமையைச் செய், பலனை எதிர்பாராதே" என்பதனை அந்தப் புன்னகை எனக்குக் கூறியது.

**நாவண்ணன்**

---

உணர்ச்சி அரியணையில் அமர்ந்திருக்கும் போது அறிவு வெளியே போய்விடும். - எம். ஹென்றி

# தீ சுமந்த நிலம்

## சத்ஜெய எதிர்ச்சமர்



சித்திரக்கதை- 04 ராகவன்




# குதூகலம்



## அவரும் இவரும்

உலகப்புகழ் பெற்ற நகைச்சுவை நாடகாசிரியரான ஜோர்ஜ்பெர்னாட்ஷா ஒரு இசைநிகழ்ச்சிக்குச் சென்றிருந்தார். அது ஒரு வயலின் இசைநிகழ்ச்சி.

வயலின் வித்துவானின் கச்சேரிமுடிய 'ஷா'வை நிகழ்ச்சிக்கு அழைத்த பெண்மணி அவரிடம் வந்து "இந்த வித்வானைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்றார்.

"இவரின் கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது எனக்கு 'பாத்ரூஸ்கி' யின் நினைவு தான் வந்தது " என்றார் 'ஷா' அதைக்கேட்ட அப்பெண்மணி அதிர்ந்து போனாள் 'பாத்ரூஸ்கி' வயலின் வித்வானில்லையே' என்று சொன்னாள். 'இவரும் அப்படித்தான்' என்றார் ஷா அமைதியாக...

## அதற்கு மட்டும் ஆமாம்

இரண்டாம் உலகப் போரின் போது ரஷ்யாவின் தலைவராக இருந்த ஸ்டாலினும் அவரது வெளியுறவுத்துறை அமைச்சரான 'மாலட்போ'வும் ஏதோ ஆலோசனையில் இருந்தவேளை தொலைபேசி அழைத்தது பேசியவர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர்'பயர்ன்ஸ்' என்பவர் "ஹலோ - மிஸ்டர் பயர்ன்ஸா'' என்று கேட்ட மாலபோவ் தொடர்ந்து

'இல்லை'

'முடியவே முடியாது'

'கண்டிப்பா முடியாது...'

'ஆமாம்'

'இல்லை....முடியாதென்றால் முடியாது தான்' என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டார். பின் ஸ்டாலினைப் பார்த்தார்.

ஸ்டாலின் அவரிடம் 'ஒரு தடவை ஆமாம்' என்றீர்களே அது எதற்கு? என்றார் 'பேசுகிறது நன்கு கேட்கிறதா என்று கேட்டார் அதற்குத்தான் ஆமாம் என்றேன்' என்றார் மாலபோவ்.

## இறுதி விருப்பம்

இரண்டாம் உலகப் போர் தீவிரமான சமயம் ஹிட்லர் ஜெர்மனிமீது படையெடுத்த நேரம்.

போர்முனைக்கு தனது வீரர்களை உற்சாகப்படுத்தும் நோக்குடன் சென்றிருந்த ஹிட்லர் ஒரு வீரனின் அருகில் சென்று "உன் அருகில் ரஷ்யரின் எறிகணை வந்து வீழ்ந்து வெடிக்கும் சமயம் உனது இறுதி விருப்பம் எதுவாக இருக்கும்?'' எனக் கேட்டார்.

அவன் தாமதிக்காது, ''தாங்களும் அச்சமயம் என்னருகில் இருக்க வேண்டுமென்பதே என் ஒரே விருப்பமாக இருக்கும்" என்றான் "பார்க்கலாம்..."ஹிட்லர் சிரித்துக் கொண்டே நகர்ந்தார்.

## இது எப்படி இருக்கிறது

பிரஞ்சு எழுத்தாளர்களில் பால்ஸாக் மிகவும் பிரபலமானவர். அவருக்கு ஒரு மாமா இருந்தார். அவர் இறக்கும் போது பால்ஸாக்கிற்கு பெருந்தொகை செல்வத்தை எழுதிவைத்து விட்டு போனார்.

இந்த நல்ல செய்தியை கேள்வியுற்ற பால்ஸாக் தனது நண்பர்களுக்கு பின் வருமாறு கூறினார்.

"நேற்றுக் காலை 5 மணியளவில் மாமாவும் நானும் அதற்கு முதல் இருந்ததைவிடவும் சிறந்த வாழ்வை யடைந்தோம்.''

■■


சக்தி, வலிமை, பலம்!
சுவைமிகு சக்தியும்
செழுமையும் நிறைந்த
பரிபூரணமான, பொன்னான மோல்ட்
பானம் நெஸ்டோமோல்ட்.
உங்களது சுறுசுறுப்பான வாழ்க்கை
ஓட்டத்திற்குத் தேவைப்படுவது இதுவே.
எப்போதும் நீங்கள் புத்துணர்வுடனும் தென்போடும் இருக்கத் துணை புரிகிறது
நெஸ்டோமோல்ட். நாளில் என்நேரமும் முழுக் குடும்பத்திற்கும்
உற்சாகமும் உத்வேகமும் தந்து துடிப்புடன்
திகழவைக்கும் பரிபூரணமான மோல்ட்டட் பானம் நெஸ்டோமோல்ட்.
Nestlé
NESTOMALT
'பரிபூரண' மோல்ட்டட் ஆகார பானம்

# நேர்நோக்கு

## "நாட்டைக் காக்க..."

"நாட்டைப் பாதுகாத்தல்" என்ற கூச்சல் மீண்டும் சிங்கள இனவாதிகள் மத்தியிலிருந்து வேகமாக எழத்தொடங்கியுள்ளது. பொதுசன ஐக்கியமுன்னணி, ஜே.வி.பி., சிகல உறுமய என்பன போன்ற கட்சிகள் ஒரு புறமிருக்க, பௌத்த பிக்குக்கள் சிலர் "நாட்டைக் காக்கும்" இயக்கங்களை ஆரம்பித்திருக்கின்றனர். ஜே.வி.பி.யானது பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து "நாட்டைக் காக்க" முற்படுகையில், ஏனைய அமைப்புக்கள், தமிழர்களிடம் இருந்து மட்டுமல்ல ஐக்கியதேசியமுன்னணி அரசாங்கம், பொதுசனஐக்கிய முன்னணி ஆகியவற்றிடமிருந்தும் கூட நாட்டைக் காக்கப்போவதாக கூக்குரலிடுகின்றன.

சிகல உறுமய சமாதான முயற்சிகளை முறியடிக்க எவருடனும் கூட்டுச் சேரத்தயாராக இருப்பதாகப் பகிரங்கமாக அறிவித்திருக்கிறது. சிங்களக் கட்சிகளுடன் மட்டுமல்ல தமது கொள்கைக்கு விரோதமான கொள்கைகளைக் கொண்ட தமிழ்க் குழுக்களுடன் கூட்டுச் சேரத் தயாராக இருப்பதாகவும் அது கூறுகிறது.

அதாவது ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல். எவ் (வரதர்அணி) என்பவற்றை அது அங்கீகரிக்கத் தயாராக இல்லாதபோதும் அவை பேச்சு வார்த்தைகளுக்கும் சமாதானத் முயற்சிகளுக்கும் எதிரானவை - எதிரான செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றன என்பதனைப் புரிந்து கொண்டு அவற்றை இணைத்துக் கொள்ளவும் தயாராக இருப்பதாக தெரிவிக்கிறது. பேச்சுவார்த்தைகளைக் குழப்புமட்டுமான கூட்டாகவே அதனைச் சிகல உறுமய விரும்புகிறது.

இதேவேளை பொதுசன ஐக்கிய முன்னணியும் சரி ஐக்கிய தேசியக்கட்சியும் சரி ஏகாதிபத்திய வாதிகளுடன் சேர்ந்து தமிழருக்கு நாட்டை விற்க முற்படுவதாகவே அது கருதுகிறது.

இதேவேளை "நாட்டைக் காக்கும் இயக்கம்" எனும் பெயரில் பௌத்த பிக்குக்களால் ஆரம்பிக்கப்பட்ட ஓர் அமைப்பு நாட்டைக் காக்க தமிழ் முஸ்லிம்களையும் கூட்டுச் சேர அழைக்கிறது. அத்துடன் சிங்கள அரசியல் வாதிகளிடமிருந்து விலகி தம்முடன் இணைந்து கொள்ளுமாறு அது கோரிக்கை விடுக்கிறது. இந்த இயக்கமும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான கூக்குரலாக இதனை முன்வைப்பதால் எந்த தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நாட்டைக் காக்க முன்வருமாறு அறைகூவல் விடுக்கிறது என்பது வெளிப்படையான விடயமாகும்.

பொதுசன ஐக்கிய முன்னணி முதல் - "நாட்டைக் காக்கும் பிக்குகள் அமைப்பு" வரை இன்றைய சமாதான முயற்சிகளை எவ்வாறேனும் முறியடித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டவை என்பது தெரிந்த ஒன்றே.

ஆனால் இதனை "நாட்டைக்காத்தல்" எனும் பெயரில் இவர்கள் அழைப்பது தான் வேடிக்கையான விடயமாகும். இன்றைய சமாதான முயற்சிகள் இவர்களால் முறியடிக்கப்படுமாயின் அடுத்து இந்தப் பிரச்சினைக்கு எதனை இவர்கள் வைத்திருக்கிறார்கள் என்ற கேள்வி எழுந்தால் அதற்குப் பதிலாக யுத்தத்தையே கூறுகின்றனர்.

சுமார் ஏழுவருடகால யுத்தம் நடத்தி அனுபவப்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணி கூட சமாதான முயற்சிகளை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்டாலும், அதன் மூலம் தீர்வொன்று எட்டப்பட வேண்டுமென்ற மனப்பூர்வமான எண்ணம் அதற்கு இல்லை, அது புலிகளின் ஆயுதங்களைக்களைவது தொடர்பாகவே இன்னமும் கனவு கண்டு கொண்டிருக்கிறது. ஏழுவருடகால தீவிர யுத்தத்தில் செய்ய முடியாததை அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியேற்றுவதற்கான நிபந்தனையாக அது இப்போது கூறுகிறது. எனவே அதனது உள்மனத்து எண்ணம் யுத்தமே என்பது இதன் மூலம் புலப்படுத்தப்படுகிறது.

இதேவேளை சமாதான முயற்சிகளை முற்றுமுழுதாக எதிர்க்கும் ஜே.வி.பி. தீர்வாக, வெளிப்படையாகவே முன்வைப்பது யுத்தத்தையே. புலிகளை யுத்தமூலம் அழித்து விட்டு இராணுவரீதியான தீர்வையே அது முன்வைக்கிறது.

சிகல உறுமய, மற்றும் புதிய அமைப்புகள் பலம் வாய்ந்தவையாக இல்லாவிட்டாலும் கிராம ரீதியாக மக்கள் மனத்தில் சமாதானத்துக்கு எதிரானதும் யுத்தத்தை நோக்கியதுமான கருத்துக்களையே பரப்பி வருகின்றன.

ஆனால் யுத்தமானது நாட்டை எங்கு கொண்டு செல்லும் என்பது கடந்த 20 வருடகால யுத்தம் புலப்படுத்தியிருக்கிறது. அதிலும் ஏழுவருடகாலமாக சந்திரிகா குமாரதுங்கதலைமையிலான. பொதுசன ஐக்கிய முன்னணி நடத்திய யுத்தம் சிறிலங்காவிற்கு சமாதானத்தைக் கொண்டுவரவில்லை. மாறாக பொருளாதார ரீதியாக மீளமுடியாத ஒரு நிலைமைக்கே சிறிலங்காவை இட்டுச்சென்றது.

அரச ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கக் கூட திறைசேரியில் பணமில்லாதநிலை சிறிலங்காவின் முக்கிய வருவாய் ஈட்டும் துறைகள், மூலவளங்கள் என்பவற்றை அந்நிய முதலீட்டாளர்களுக்கு விற்கவேண்டி ஏற்பட்டது. பொருளாதார வளர்ச்சி மறைப் பெறுமானத்திற்குச் சென்றது. சுருக்கமாகச் சொன்னால் சிறிலங்கா அழிவு நோக்கி வேகமாகச் சென்றது.

இந்நிலையில் தான் மக்கள் இதிலிருந்து மீள்வதற்காகச் சமாதானப் பாதையை நாடினர். எனவே மீண்டும் யுத்தத்தை விரும்புவது - அதுவும் நாட்டைக் காக்க என்று கூறிக் கொண்டு யுத்தம் நோக்கிச் செல்வதை மடமைத்தனம் என்று கூறுவதில் தவறில்லை.

**வேலவன்**

படத்திற்கு மெருகூட்டுங்கள் - 03



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

..................................................
..................................................
..................................................
..................................................

படத்திற்கு மெருகூட்டுங்கள் - 03

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் : ..................................................
முகவரி : ..................................................
..................................................

(2ம் பக்கத்தொடர்ச்சி)

அதிகாரம் செய்து அச்சுறுத்தல் விடுத்து, அவமதிக்கும் நிலையில் தங்களின் சுயபாதுகாப்புக்காக காவலரண்களில் துப்பாக்கிகளின் விசைகளில் விரல்கள் பதிந்தபடி போவோரையும் வருவோரையும் சந்தேகத்துடன் குறிபார்த்து நிற்கும் சூழலில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு குறித்து பேசுவதிலும், திட்டமிடுவதிலும் அதற்கென நிதி ஒதுக்கீடு செய்வதிலும் அர்த்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்தவாரம் யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் வாசிக்கப்பட்ட 'பொங்குதமிழ்' நிகழ்வுப் பிரகடனத்தை நினைவில் கொள்ளவேண்டும்.

பொங்கு தமிழ் பிரகடனத்தில் ஒலிக்கும் தார்மீக ஆவேசக் குரல்களின் நியாயத்தன்மையை புரிந்துகொள்ள வேண்டிய பொறுப்பு அரசுக்கும் இராணுவத்திற்கும் மட்டுமல்ல, இன்று சமாதான பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்கும் - உற்சாகம் கொடுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் உண்டு.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால் சிறிலங்கா அரசாங்கத்தை விடவும், கடந்த காலங்களில் அவ்வரசுக்கு தமிழ்மக்கள் மீதான ஒரு போரை தீவிரப்படுத்த இராணுவ ஆயுத உதவிகளையும், கடன் நிதிகளையும் வழங்கி, இன்று தமிழ் மக்களுக்கு இந்த அவலநிலை உருவாக ஏதோ ஒரு வகையில் காரணமாக - துணைக் காரணியாக விளங்கிய சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த, இன்று சமாதானத்தை ஆதரித்து நிற்கும் நாடுகள், இப்பிரகடனம் தெரிவிக்கும் செய்தியின் நியாயத் தன்மையைப் புரிந்து கொண்டு மக்களை சமாதானம் சென்றடைவதற்கு இடையூறாக, அவர்களின் புனர்வாழ்வுக்குத் தடையாக, மக்களுக்கு சமாதான நகர்வுகளின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடியதும், அவர்களை சர்வதேச சமூகத்தின் மீது அவநம்பிக்கை கொள்ள வைக்கக் கூடியதுமான உயர்பாதுகாப்பு வலய நெருக்கடிக்குத் தீர்வுகாண அதுவும் மக்களின் நலனை மையமாகக் கொண்ட தீர்வினைக்காண - அரசையும், குறிப்பாக சிறிலங்காவின் மிகவும் ஆபத்தான சமாதான எதிர்ப்புச் சக்தியான நிறைவேற்று அதிகாரப்பலம் கொண்ட சனாதிபதியையும் வலியுறுத்தும் தார்மீகக் கடமைப் பொறுப்பை அதிகம் கொண்டவையாக உள்ளன என்பதை இங்குவலியுறுத்த விரும்புகிறோம்.

அரசின் அபிலாசையோ, சனாதிபதியின் அபிலாசையோ இராணுவ அபிலாசையோ, அயல் நாட்டு இராணுவ நிபுணரின் ஆலோசனை அபிலாசையோ, தமிழ் மக்களின் மனித உரிமைகள் அபிலாசைகளுக்கு முரணானதாக இருக்குமேயானால் சமாதான முயற்சிகளை கானல் நீராக்க அது ஒன்றே போதுமான காரணியாகி விடும் என்பதையும் தெளிவு படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் - பிரித்தானியத் தூதுவருடன் பேசும் போது கூறிய 'யுத்த நிறுத்தம் செய்து ஓராண்டாகியும் மக்களைச் சமாதானம் சென்றடையவில்லை' என்ற வார்த்தைகள் அவருக்கு நிறையச் செய்திகளை ஆழமாக உணர்த்தக் கூறியவைகளேயாகும்.


### "ஈழநாதம்" வாரவெளியீடான வெள்ளி நாதத்தின் விளம்பரக் கட்டணம்

| அளவு | உட்பக்கம் கறுப்பு வெள்ளை | பின் பக்கம் வர்ணம் (கலர்) |
|---|---|---|
| முழுப்பக்கம் | 12000\= | 20000\= |
| அரைப்பக்கம் | 6000\= | 10000\= |
| செ.மீ. கொலம் | 60\= | 100\= |
| ஒப்பந்த அடிப்படையில் | 48\= | 80\= |


## படத்திற்கு மெருகூட்டுங்கள் - 02



பரிசுக்குரியவர்
இ.பிருந்தா
இல.62, பணக்கார வீதி,
கணேசபுரம்,
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

மச்சமது தேடப்போய் மாண்டாரோ உன்கணவர்
மாற்றான் படைகளினால் அழிந்தானோ உந்தன் மகன்
கச்சான் பொதி விற்றுக் காசுழைக்கும் அம்மாவே
கலங்குதம்மா என்கண்கள் க்காட்சியினைக் கண்ணுற்று.

### பாராட்டுக்குரிய வரிகள்

ஊர் உறவு உடமை இழந்தாலும்
துட்டர்களின் அடிவருடி - தாய்
நாட்டிற்குத் துரோகம் இழைப்பதை விட - தன்
மானத்துடன் கடலை விற்று வாழ்வது நன்று

ந. புரட்சிமாறன்,

யாரடா சொன்னவன்
வாழ வழியில்லையென்று
பாரடா இங்கே
போதிக்கும் திருவுருவை.

ந. ரமேஷ்,
முல்லைத்தீவு.

நாட்டிற்குள் பேய்புகுந்தது - உயிர்
கூட்டுக்குள் இடி விழுந்தது - அன்றே
சுமக்கலாயினாள் கடலைச்சுருள்களை - இன்றும்
மாறாவில்லை அந்நிலை.

க. ஈழக்குமரன்,

ஊரிழந்து உறவிழந்து வீடிழந்து வந்ததால்
உடுத்த சேலை வீடானதோ - அம்மா
உச்சி வெயிலும் உடலைப் பொசுக்க
உழைக்கின்றாய் தாயே உனக்கேன் இந்த நிலை.

ஆ. குயிலிசை,
செஞ்சொலை

"தள்ளாத வயதிலும் - தாயே
உனக்கேன் இந்த நிலை?
பொல்லாத வெயில் கூட - உன்
துன்பம் அறியாதோ? - போ"

ஆ. அமலா,
செஞ்சோலை.




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.